# ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு




ஆசிஷ் ராய்ச்சூர்

**இந்தப் புத்தகம் இலவசமாக மட்டுமே விநியோகிக்கப்பட வேண்டும்**

ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்டு அவுட் ரீச் ஊழியத்தால் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது, இந்தியா, பெங்களூர்.

தற்போதைய பதிப்பு: 2024

**தகவல் தொடர்புக்கு**

All Peoples Church & World Outreach,
# 319, 2nd floor, 7th main, HRBR layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore - 560 043,
Karnataka, INDIA.

தொலைபேசி: +91-80-25452617
**மின்னஞ்சல்: bookrequest@apcwo.org**
**இணையதளம்: apcwo.org**

மேற்கோள் குறிப்பிடப்படாத, அனைத்து வேதாகம மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து (BSI), தமிழ் பழைய பதிப்பு - நியூ ஆர்த்தோ) எடுக்கப்பட்டு, பைபிள் சொசைட்டி ஆப் இந்தியா மூலமாக வெளியிடப்பட்டது. அனுமதியோடு பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

**நிதி பங்குதாரர்கள்**

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் உறுப்பினர்கள், பங்குதாரர்கள் மற்றும் நண்பர்களின் நிதியுதவியின் மூலம் இந்த வெளியீட்டை இலவசமாக விநியோகிப்பது சாத்தியமாகிறது. இந்த இலவச வெளியீட்டின் மூலம் நீங்கள் பலனடைந்திருந்தால், ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சிலிருந்து இலவச வெளியீடுகளை அச்சடித்து விநியோகிக்க உதவும்படி நிதியுதவி அளிக்க உங்களை ஊக்குவிக்கிறோம். தயவுசெய்து **apcwo.org/give** என்ற வலைதளத்திற்குச் சென்று பார்க்கவும் அல்லது உங்கள் பங்களிப்பை எவ்வாறு வழங்குவது என்பதைப் பற்றி இந்தப் புத்தகத்தின் பின்புறத்தில் எழுதப்பட்டுள்ள “ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில் பங்காளராய் இருத்தல்” என்ற பக்கத்தைப் பார்க்கவும். நன்றி!

**இலவச பயன்பாடுகள் மற்றும் தொடர்புடைய இணையதளங்கள்**

**பிரசங்கங்கள்:** apcwo.org/sermons | **புத்தகங்கள்:** apcwo.org/books
**திருச்சபை செயலி:** apcwo.org/app | **வேதாகமக் கல்லூரி:** apcbiblecollege.org
**மின்வழி கற்றல்:** apcbiblecollege.org/elearn | **ஆலோசனை:** chrysalislife.org
**இசை:** apcmusic.org | **ஊழியர்கள் ஐக்கியம்:** pamfi.org
**ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேர்ல்டு அவுட்ரீச்:** apcworldmissions.org

(Tamil — A Time for Every Purpose)

# ஒவ்வொன்றிற்கும்
# ஒவ்வொரு
# காலமுண்டு

# பொருளடக்கம்


1. நேரத்தை தேவன் காண்பதுபோல் நாமும் காணுதல் 1
2. காலத்தை உணர்ந்து பிரயோஜனப்படுத்திக்கொள்ளுதல் 9
3. காலங்கள் மற்றும் சமயங்களைப் புரிந்துகொள்ளுதல் 20
4. விவேகத்துடன் நம் வாழ்க்கையை ஒழுங்குபடுத்துதல் 34
5. காலத்தை மீட்டெடுத்தல் 43

# 1

# நேரத்தை தேவன் காண்பதுபோல் நாமும் காணுதல்

பிரசங்கி 3:1-8

1 ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு;
வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு.
2 பிறக்க ஒரு காலமுண்டு, இறக்க ஒரு காலமுண்டு;
நட ஒரு காலமுண்டு, நட்டதைப் பிடுங்க ஒரு காலமுண்டு;
3 கொல்ல ஒரு காலமுண்டு, குணமாக்க ஒரு காலமுண்டு;
இடிக்க ஒரு காலமுண்டு, கட்ட ஒரு காலமுண்டு;
4 அழ ஒரு காலமுண்டு, நகைக்க ஒரு காலமுண்டு;
புலம்ப ஒரு காலமுண்டு, நடனம்பண்ண ஒரு காலமுண்டு;
5 கற்களை எறிந்துவிட ஒரு காலமுண்டு, கற்களைச் சேர்க்க ஒரு காலமுண்டு; தழுவ ஒரு காலமுண்டு, தழுவாமலிருக்க ஒரு காலமுண்டு;
6 தேட ஒரு காலமுண்டு, இழக்க ஒரு காலமுண்டு;
காப்பாற்ற ஒரு காலமுண்டு, எறிந்துவிட ஒரு காலமுண்டு;
7 கிழிக்க ஒரு காலமுண்டு, தைக்க ஒரு காலமுண்டு;
மவுனமாயிருக்க ஒரு காலமுண்டு, பேச ஒரு காலமுண்டு;
8 சிநேகிக்க ஒரு காலமுண்டு, பகைக்க ஒரு காலமுண்டு;
யுத்தம்பண்ண ஒரு காலமுண்டு, சமாதானம்பண்ண ஒரு காலமுண்டு.

பிரசங்கி 3:11

அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்; உலகத்தையும் அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார்; ஆதலால் தேவன் ஆதிமுதல் அந்தம்மட்டும் செய்துவரும்கிரியையை மனுஷன் கண்டுபிடியான்.

தானியேல் 2:21

அவர் காலங்களையும் சமயங்களையும் மாற்றுகிறவர்; ராஜாக்களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவர்; ஞானிகளுக்கு ஞானத்தையும், அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கிறவர்.

“இப்போது மணி என்ன?” என்பது நமக்குப் பரீட்சயமான அடிக்கடி கேட்கப்படும் ஒரு கேள்வியாகும். இன்றைய வேகமான உலகில், ஜனங்கள் கடிகாரத்தைப் போல் வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறார்கள். உண்மையில், நம்மில் பெரும்பாலானவர்கள் நம் வாழ்க்கையை கடிகார ஓட்டத்திற்கு ஏற்றபடி ஒழுங்குபடுத்தி அமைத்துக்கொள்ள ஆவலாய் இருக்கிறோம். கடிகாரம், அதாவது நேரமானது, நம் வாழ்வின் மீது ஒரு வலுவான ஆதிக்கத்தைக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. சரியான நேரத்தில் சரியான காரியத்தைச் செய்வது, சரியான நேரத்தில் சரியான இடத்தில் இருப்பது, சரியான நேரத்தில் சரியான வார்த்தையைச் சொல்வது — ஆகிய இவை அனைத்துமே நமக்கு மிகவும் முக்கியமானதாகும். அதே சமயத்தில், நேரத்தை “மிச்சப்படுத்துவதற்கான” வழிகளையும் பாதைகளையும் கண்டுபிடிக்க அதிக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

உலகம் உண்டானது முதற்கொண்டு அல்லது ஒருவேளை நித்திய நித்தியமாக கடந்த காலமாகிய — அறியப்படாத காலத்திலிருந்து நிகழ்காலமாகிய இன்று வரை—தேவனிடத்தில் ஒரு கடிகாரம் உள்ளது என்ற உண்மையை சிந்தித்துப் பார்ப்பதற்கு நீங்கள் எப்போதாவது சற்று நேரம் ஒதுக்கியிருக்கிறீர்களா? நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கைக்கும் தேவன் ஒரு கடிகாரத்தை வைத்திருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா? உங்கள் மணிக்கட்டில் இருக்கும் கடிகாரம் அல்லது சுவரில் உள்ள கடிகாரத்தின்படி மட்டும் அல்லாமல், தேவனுடைய கடிகாரத்தின்படி உங்கள் வாழ்க்கையை ஒழுங்குபடுத்தி அமைத்துக்கொள்ள நீங்கள் எப்போதாவது முயற்சித்திருக்கிறீர்களா அல்லது விரும்பியிருக்கிறீர்களா? தேவனுடைய நேரத்திற்கு ஏற்ப நீங்கள் காரியங்களைச் செய்வதும், உங்கள் வாழ்க்கையின் எந்த நேரத்திலும், தேவன் விரும்புவதை மட்டுமே நீங்கள் செய்ய வேண்டும் என்பதும் எவ்வளவு முக்கியம்? மேலும்,

உங்கள் வாழ்க்கைக்கு நியமிக்கப்பட்ட நேரத்தில் நீங்கள் எப்படி இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறாரோ, அப்படியே நீங்கள் மாற வேண்டியது உங்களுக்கு எவ்வளவு முக்கியம்?

இவை சவாலான கேள்விகள், தேவனுடைய கடிகாரத்தின் நேரத்தை அறிந்துகொள்ளவும் அதற்கேற்றபடி நம் வாழ்க்கையை ஒழுங்கமைத்துக்கொள்ளவும் கற்றுக்கொள்வது உண்மையிலேயே முக்கியமானது. தனி நபர்களாக, தேவன் நமக்காக வகுத்திருக்கிற காலத்தைப் பகுத்தறியவும் புரிந்துகொள்ளவும் இந்தப் புத்தகம் உதவும்.

## தேவனுடைய கடிகாரம்

**அப்போஸ்தலர் 1:6,7**

**6 அப்பொழுது கூடிவந்திருந்தவர்கள் அவரை நோக்கி ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள்.**

**7 அதற்கு அவர்: பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் (கிரேக்க *க்ரோனோஸ்*) வேளைகளையும் (கிரேக்க *கெய்ரோஸ்*) அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல.**

தேவனுக்கு ஒரு கால அட்டவணையும், ஒரு குறிப்பிட்ட ஒழுங்கும் நேரமும் உள்ளது, அதில் அவர் திட்டமிட்டிருக்கிற நிகழ்வுகளை வெளிப்படுத்துகிறார். அவர் தாம் திட்டமிட்ட காலத்திற்கு ஏற்ப செயல்படுகிறார். அவர் பேசுகிறார், பின்னர் தம்முடைய வார்த்தையை ஏற்ற நேரத்தில் நிறைவேற்றுகிறார். தேவன் பேசும் வார்த்தைகள் *"ஏற்ற காலத்தில் நிறைவேறும்"* (லூக்கா 1:20). தேவன் பேசிய விஷயங்கள், *"முடிவுகாலமட்டும் புதைபொருளாக வைக்கப்பட்டும் முத்திரிக்கப்பட்டும் இருக்கும்"* (தானியேல் 12:9). இது தேவனுடைய "கடிகாரத்தில்" "காலங்களின் நிறைவேறுதல்" அல்லது "குறித்த காலம்" என்று அழைக்கப்படுகிறது. இது மிகவும் பொருத்தமானதும்,

ஏற்றதும் மற்றும் சரியானதுமான நேரத்தைக் குறிக்கிறது—அது காலம் கனிந்ததையும்—சரியான நேரத்தையும் குறிப்பதாகும். உதாரணமாக, மீட்பரின் வருகையைக் குறித்து வாக்குப்பண்ணப்பட்ட ஏதேன் தோட்ட உடன்படிக்கையானது, ஆதியாகமத்தின் மூன்றாவது அத்தியாயத்தில் உடன்படிக்கை பண்ணப்பட்டிருந்தாலும், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகுதான் இயேசு வரலாற்றில் அடியெடுத்து வைத்தார். ஏன் இவ்வளவு காலம் காத்திருக்க வேண்டியிருந்தது? *"காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்"* (கலாத்தியர் 4:5) என்று வேதாகமம் விளக்குகிறது. *'கெய்ரோஸ்'* தருணத்தில்—வரலாற்றில் மிகவும் பொருத்தமானதும், சரியானதுமான நேரத்தில்—கர்த்தராகிய இயேசு இந்த உலகத்திற்குள் அடியெடுத்து வைத்தார். தேவனுடைய நித்திய நோக்கமும் அவ்வாறே நிறைவேற்றப்படும். *"காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று, தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எனக்கு அறிவித்தார்"* (எபேசியர் 1:9,10). தேவன் *"மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்"* (அப்போஸ்தலர் 17:31).

ஆகவே, தேவன் தமது ராஜ்யபாரத்தில் தாம் முன்னரே தீர்மானித்ததை நிறைவேற்றி காரியங்களை நடப்பிக்க, தாம் எப்போது தலையிட வேண்டும் என்ற கால அளவை அவர் கொண்டிருக்கிறார் என்பதை நாம்

காண்கிறோம். அவர் பூமியை விட்டு (பரமேறிச் செல்வதற்கு) புறப்படுவதற்கு சற்று முன், இஸ்ரவேல் தேசம் மறுபடியும் அதிகாரத்திற்குக் கொண்டுவரப்படும் காலமும் ஆளுகை செய்யும் காலமுமான ரோம சாம்ராஜ்யத்திலிருந்து விடுவிக்கப்படும் காலம் எது என்று சீஷர்கள் கர்த்தரிடம் விசாரித்தனர் (அப்போஸ்தலர் 1:6,7). கர்த்தருடைய பதிலானது, காலங்களையும் சமயங்களையும் பிதா தமது சொந்த ஆதீனத்தில் வைத்திருக்கிறார் என்பதை நமக்குக் கற்பிக்கிறது. இயேசு *'க்ரோனோஸ்'* மற்றும் *'கெய்ரோஸ்'* பற்றிப் பேசினார். கிரேக்க வார்த்தையான *'க்ரோனோஸ்'* என்பது காலகட்டத்தின் அளவை, அதாவது நீட்டிக்கப்பட்ட கால அளவை அல்லது எவ்வளவு காலம் என்பதை அது குறிக்கிறது மற்றும் *'கெய்ரோஸ்'* என்பது காலத்தின் தன்மையை அல்லது குறிப்பிட்ட சமயத்தைக் குறிக்கிறது. *'க்ரோனோஸ்'* என்ற வார்த்தை காலத்தின் அளவாக, ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் அளவைக் கூறுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது—அதாவது, ஒரு குறிப்பிட்ட இடைவெளி அல்லது காலத்தின் நீட்சி/அளவைக் குறிக்கிறது. *'கெய்ரோஸ்'* என்ற வார்த்தை சிறப்பு நிகழ்வுகள், சாதகமான தருணங்கள், முக்கியமான நிகழ்வுகள் மற்றும் காலத்தின் மாற்றங்களைக் குறிக்கும் வகையில் பயன்படுத்தப்படுகிறது. இது "காலத்தின் நிறைவேறுதலை"—தற்போதைய சமயம் எந்த நிகழ்வுக்கு மிகவும் பொருத்தமானது என்பதைக் குறிக்கிறது.

சில காலங்கள் மற்றும் பருவங்களை இரகசியமாக வைத்திருக்கவும் "தமது வல்லமைக்குள்" வைத்திருக்கவும் பிதாவானவர் தெரிந்துகொண்டார். *"மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்"* (உபாகமம் 29:29) என்று வேதாகமம் நமக்குக்

கற்பிக்கிறது. இரண்டாம் வருகை பற்றியும் காலத்தின் முடிவு பற்றியும், *“அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார். அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால் எச்சரிக்கையாயிருங்கள், விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்”* (மாற்கு 13:32,33) என்று இயேசு சொன்னார். இருப்பினும், தேவன் வெளிப்படுத்த விரும்பும் *‘க்ரோனோஸ்’* மற்றும் *‘கெய்ரோஸ்’* ஆகியவற்றை நாம் அறிய முடியாது என்பது இதன் அர்த்தமல்ல. தம்முடைய ஜனங்கள் தாங்கள் வாழும் காலங்களையும் சமயங்களையும் தனி நபர்களாகவும் சமூகமாகவும் அறிந்துகொள்ள வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார் என்பதை வேதாகமம் முழுவதிலும் நாம் காணலாம். அவருடைய கடிகாரத்தில் நேரம் என்ன ஆகிறது என்பதை தம்முடைய ஜனங்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார்.

## வேதாகமத்தில் “காலம்”

நேரம் குறித்த வேதாகமத்தின் பார்வை (Mercer Dictionary of the Bible, 1990), பற்றி சைமன் ஜே. டெவ்ரீஸ் என்பவர் தனது குறிப்பில், “நேரம் குறித்த எபிரெயர்களின் கருத்தைப் பற்றிக் கூறும் மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், ஒவ்வொரு புதிய நாளும் முந்தைய எல்லாவற்றிலிருந்தும் தரமான முறையில் வேறுபட்டதாக இருக்க வேண்டும் என்றும், மற்ற நாட்களில், தேவன் தம்முடைய சொந்த தெய்வீகத் தன்மையை சிறப்பானதும் தீர்க்கமானதுமான சில வழிகளில் வெளிப்படுத்தக்கூடிய வகையில் ஒரு தனித்துவமான, மறுபடியும் அதையே திரும்பச் செய்வதாக இராத ஒரு நிகழ்வை நிகழ்த்த வேண்டும் என்றும் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். எனவே, நாட்களை அவற்றின் மிகவும் விசேஷித்த நிகழ்வின் அடிப்படையில் குறிப்பிடுவதற்கு வேதாகமம் ஒரு சிறப்பு முறையை உருவாக்கியது” என்று சொன்னார். மேலும் அவர், “வேதாகமத்தின் ஜனங்கள்,

தேவன் தங்களை எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் சந்திக்க முடியும் என்று விசுவாசித்தனர்; மேலும் எல்லா இடமும் சரித்திரம் முழுமையும் தேவனுடைய எல்லையாக இருந்தது. எனவே, வேதாகமம் ஒரு நோக்கமும், முன்னேற்றமும், ஒரு குறிக்கோளும், ஒரு செயல்முறையும், ஒரு விதியும் கொண்டதாகும்" என்று கூறுகிறார்.

வேதாகமத்தில் "நேரம்" என்பது ஒரு முக்கிய அங்கமாகும், இதில் வெவ்வேறு வகையான நேரம்—வெவ்வேறான *'கெய்ரோஸ்'* தருணங்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. சங்கீதப் புஸ்தகத்தில் வெவ்வேறு வகையான காலத்தைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது, தேவனைக் கண்டடையத்தக்க ஒரு சமயம் (சங்கீதம் 32:6), ஆபத்துக்காலம் (சங்கீதம் 37:18,19), தீங்குநாள் (சங்கீதம் 41:1) மற்றும் அநுக்கிரக காலம் (சங்கீதம் 69:13; 2 கொரிந்தியர் 6:2) என்று வெவ்வேறு வகையான காலங்கள் வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. புதிய ஏற்பாட்டில், தேவன் தேசத்தின் எல்லைகளை அமைப்பது மட்டுமல்லாமல், தேசங்களின் எழுச்சி மற்றும் வீழ்ச்சிக்கான காலத்தையும் நியமிக்கிறார் என்பதை ஒருவர் அறிந்துகொள்ளலாம் (அப்போஸ்தலர் 17:26,27). நாம் வாழும் காலம் *"பிற்காலங்கள்"* (1 தீமோத்தேயு 4:1) மற்றும் *"கடைசி நாட்கள்"* (2 தீமோத்தேயு 3:1) போன்ற சொற்களால் குறிப்பிடப்படுகின்றன. *"காலங்களையும் சமயங்களையும்"*(1 தெசலோனிக்கேயர் 5:1), *"இந்தக் கடைசி காலங்கள்"* (1 பேதுரு 1:20), *"பல்வேறு காலங்கள்," "பூர்வ காலங்கள்"*(எபிரெயர் 1:1) மற்றும் *"ஏற்ற சமயம்"*(எபிரெயர் 4:16) போன்ற சொற்றொடர்களும் காணப்படுகின்றன. எனவே, காலம் பற்றிய வேதாகமக் கண்ணோட்டத்தைப் புரிந்துகொள்வது ஒரு வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கைக்கு முற்றிலும் அவசியமான ஒரு பகுதியாகும்.

## ‘கெய்ரோஸ்’ எனும் பதத்தைப் புரிந்துகொள்ளுதல்

‘கெய்ரோஸ்’ என்பது ஒரு நியமிக்கப்பட்ட நேரம், சரியான நேரம் அல்லது ஏற்ற நேரமாகும். பொதுவாக சொல்ல வேண்டுமானால், ‘கெய்ரோஸ்’ என்பது நாள்காட்டி ஆண்டுகளின் எண்ணிக்கையுடன் இணைக்கப்படவில்லை. தேவன் ஒரு குறிப்பிட்ட கால அளவைக் குறிப்பிடவில்லை என்றால், அப்போது, ‘கெய்ரோஸ்’ தருணம் என்பது சில நிபந்தனைகள் - சூழல்கள், சூழ்நிலைகள், ஜனங்கள், விஷயங்கள் மற்றும் பல காரியங்களின் ஒன்றிணைப்பைச் சார்ந்ததாக இருக்கிறது—அது தேவன் சொல்லியிருப்பவைகளை நிறைவேற்றுவதற்கான சரியான நேரமாக அமைகிறது.

உதாரணமாக, தனிப்பட்ட தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதல் ‘கெய்ரோஸ்’ தருணத்தில் நடைபெறுகிறது. ஒரு குறிப்பிட்ட நபர், தன் வியாபாரத்தில் வெற்றி பெறுவார் என்று ஒரு தீர்க்கதரிசன வார்த்தையைப் பெற்றிருந்தால், அவருடைய வெற்றி ஒரே இரவில் வந்துவிடும் என்று அர்த்தமல்ல. தேவன் எதிர்பார்க்கும் சில நிபந்தனைகளை இந்த நபர் தன் வாழ்க்கையில் செய்து முடிக்கும்போது, இந்தத் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதல் நடைபெறும். தீர்க்கதரிசன வார்த்தையைப் பெற்றவர் ஒரு இளைஞனாக இருந்தால், அவன் தனது சொந்தத் தொழிலைத் தொடங்குவதற்கு முன்பு, சில பயிற்சிகளையும், சில வருடங்கள் வேலை அனுபவத்தையும் பெற்றிருக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்ப்பார். அவன் தன் தொழிலைத் தொடங்கி, நல்ல வெற்றிகரமான நிலைக்கு வர காரணமான சிறந்த யோசனை கிடைப்பதற்கு பல வருடங்கள் ஆகியிருக்கலாம். தீர்க்கதரிசனத்தின் வார்த்தை எல்லா நேரத்திலும் உண்மையாக நிறைவேற இருந்தபோதிலும், இந்த நிபந்தனைகள் அனைத்தும் நிகழ்ந்து, ‘கெய்ரோஸ்’ தருணம் வரும்போது மட்டுமே அது நிறைவேறும்.

# 2

# காலத்தை உணர்ந்து பிரயோஜனப்படுத்திக்கொள்ளுதல்

எபேசியர் 5:15-17

**15 ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்துகொள்ளப்பார்த்து,**
**16 நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்.**
**17 ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்.**

கொலோசெயர் 4:5

**புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்.**

காலத்தை *(கெய்ரோஸ்)* பிரயோஜனப்படுத்திக்கொள்ளும்படி வேதம் நமக்கு அறிவுறுத்துகிறது. *“காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்”* என்பது நம் வாழ்வின் சரியான தருணங்களை அடையாளம் கண்டு பயன்படுத்திக்கொள்வதைக் குறிக்கிறது. மேலே உள்ள வசனத்தின் பின்னணியிலிருந்து, நாம் ஞானமுள்ளவர்களாயிருந்து கர்த்தருடைய சித்தத்தைப் புரிந்துகொண்டு கவனமாக நடந்தால் மட்டுமே இது சாத்தியமாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நம் வாழ்வின் சரியான தருணங்களைப் பயன்படுத்திக்கொள்வதற்கான நமது திறன்—சரியான நேரத்தில் சரியானதைச் செய்வது—நமது தனிப்பட்ட வாழ்க்கைக்கான தேவனுடைய சித்தத்தைப் பற்றிய நமது புரிதலைச் சார்ந்ததாக இருக்கிறது. தேவன் நம் தனிப்பட்ட வாழ்க்கைக்கு *‘க்ரோனோஸ்’* மற்றும் *‘கெய்ரோஸ்’* காலத்தை நியமிக்கிறார். நம் ஒவ்வொருவருக்கும் ஒரு *‘க்ரோனோஸ்’* அல்லது வாழ்வதற்கான ஒரு காலகட்டம் உண்டு. *“உன் ஆயுசு நாட்களைப் பூரணப்படுத்துவேன்”* (யாத்திராகமம் 23:26) என்று

தேவன் தம்முடைய ஜனங்களுக்கு வாக்குப்பண்ணினார். *“எங்கள் ஆயுசு நாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷம்”* (சங்கீதம் 90:10) என்பதை தேவனுடைய பொதுவான சித்தம் வெளிப்படுத்துகிறது. *“நீடித்த நாட்களால்”* நம்மை திருப்திப்படுத்துவதாக தேவன் நமக்கு வாக்குப்பண்ணியிருக்கிறார் (சங்கீதம் 91:16). பொதுவாகவே, *“தானியம் ஏற்றகாலத்திலே அம்பராத்தில் சேருகிறதுபோல, முதிர்வயதிலே கல்லறையில் சேருவீர்”* (யோபு 5:26) என்ற வசனத்தின்படி ஒரு தேவனுடைய பிள்ளைக்கு, முதிர்வயதில் கல்லறையில் சேரும் பாக்கியம் உள்ளது. இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், நமது தனிப்பட்ட வாழ்க்கைக்கான காலங்களையும் பருவங்களையும் தேவன் குறித்து வைத்திருக்கிறார்.

இந்தக் குறிப்பிட்ட காலங்களும் பருவங்களும், நம் வாழ்வின் *‘கெய்ரோஸ்’* தருணங்களாய் இருக்கின்றன, நாம் அதை அடையாளம் கண்டு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நாம் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இப்போது உங்கள் வாழ்க்கையில் *‘கெய்ரோஸ்’* சமயம் எது? நீங்கள் இருக்கும் வாழ்க்கையின் பருவம் என்ன? இது செயல்படுவதற்கான காலமா அல்லது ஆயத்தப்படுவதற்கான காலமா? இது படிப்பதற்கான காலமா அல்லது கற்பிப்பதற்கான காலமா? இது கிறிஸ்தவ வாழ்க்கையின் ஒரு குறிப்பிட்ட அம்சத்தைப் பற்றி நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டிய காலமா? நீங்கள் ஒரு குறிப்பிட்ட உறவை ஏற்படுத்திக்கொள்வதற்கான காலமா? இது நீங்கள் ஓய்வெடுப்பதற்கும் வரவிருக்கும் நாட்களைத் திட்டமிடுவதுக்குமான காலமா? இது விரைவான ஆவிக்குரிய வளர்ச்சியின் சமீபத்திய நிகழ்வுகளை சற்று ஆராய்ந்து மேலும் ஒருங்கிணைப்பதற்கான காலமா? இது ஒரு குறிப்பிட்ட பாடத்தை நீங்கள் ஆராய்ச்சி செய்து படிப்பதற்கான காலமா? இது நீங்கள் ஊழியம் செய்வதற்கான

காலமா அல்லது வழிநடத்துவதற்கான காலமா? நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் வாழ்க்கையின் குறிப்பிட்ட பருவத்தை அடையாளம் கண்டுகொள்ளும்போது, அதற்கான குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நம் நேரத்தை நம்மால் பிரயோஜனப்படுத்திக்கொள்ள முடியும்.

கர்த்தராகிய இயேசு ஒரு சந்தர்ப்பத்தில் எருசலேம் நகரத்தை அணுகியபோது, அவர் அந்த நகரத்தைப் பார்த்து, அதற்காகக் கண்ணீர்விட்டார். அவர், *"உன்னைச் சந்திக்குங்காலத்தை நீ அறியாமற்போனபடியால் ..."* (லூக்கா 19:41-44) என்று சொல்லி, எருசலேமின் மீது வரவிருந்த அழிவைக் குறிப்பிட்டுக் கூறி அதை அறிவித்தார். எருசலேமுக்கு தேவன் ஒரு குறிப்பிட்ட "சந்திக்கும் காலத்தை" ஏற்படுத்தியிருந்தார், ஆனால் அந்த நகரத்தின் ஜனங்கள் அதை அறிந்திருக்கவில்லை. நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கைக்காக தேவன் சிறப்பான சந்திக்கும் காலங்களை நியமித்திருக்கிறார் என்று நான் நம்புகிறேன். நாம் வாழும் இந்தக் காலங்களில், நம் இருதயங்களில் தேவன் ஒரு விசேஷித்த கிரியையைச் செய்துகொண்டிருக்கிறார், ஒருவேளை அவர் நமக்காக வைத்திருக்கும் திட்டங்களையும் நோக்கங்களையும் அவர் விரிவாக வெளிப்படுத்தக் கூடும், அல்லது நமக்குக் குறிப்பிட்ட வழிகாட்டுதலை வழங்கக் கூடும், அல்லது நமக்கு ஒரு குறிப்பிட்ட வரத்தை வெளிப்படுத்தவோ அல்லது வழங்கவோ கூடும். ஆனால், இந்தச் சந்திப்பின்போது ஏற்படும் பலன்கள் பெரும்பாலும் நாம் எப்படி நடந்துகொள்கிறோம் என்பதைப் பொறுத்ததாகவே இருக்கிறது. தேவன் நம்மைச் சந்திக்கும் காலத்தை நாம் அறியாமல் இருந்தால், தேவன் நம்மை விட்டுக் கடந்து செல்ல வேண்டியிருக்கும். தேவன் உங்கள் வாழ்க்கையில் என்ன செய்கிறார் என்பதைக் குறித்து நீங்கள் கவனமுள்ளவர்களாய் இருக்கிறீர்களா? தற்போது உங்கள் வாழ்க்கையில் அவர் செய்துகொண்டிருக்கும் கிரியைக்கு நீங்கள் எவ்விதப் பதிலளிக்கிறீர்கள்?

## அதினதின் காலத்திலும் படிப்படியாகவும்

**பிரசங்கி 3:17ஆ**

***சகல எண்ணங்களையும் சகல செய்கைகளையும் நியாயந்தீர்க்குங்காலம் ...***

**பிரசங்கி 8:6அ**

***... எல்லாக்காரியத்துக்கும் காலமும் நியாயமும் உண்டு;***

ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு சரியான நேரம் இருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் நாம் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதை அறிந்துகொள்வது முக்கியம், ஆனால் அதே நேரத்தில், பணியை சரியான நேரத்தில் செய்து முடிக்க வேண்டியதும் முக்கியமானதாகும். பொதுவாக, நாம் கர்த்தரிடமிருந்து ஒரு யோசனை, திட்டம், உத்தி அல்லது ஒரு தரிசனத்தைப் பெறும்போது, அது உடனடியாக நிறைவேறுவதைப் பார்க்க விரும்புகிறோம் அல்லது உடனடியாக அதைச் செய்துவிட விரும்புகிறோம். தேவன் நமக்காகக் கொண்டிருக்கிற திட்டங்கள் மற்றும் நோக்கங்களைப் புரிந்துகொள்வது மட்டுமல்லாமல், அந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவருக்கு ஒரு குறிப்பிட்ட காலம் இருக்கிறது என்பதை நான் அறிந்துகொண்டேன். அவருடைய திட்டங்களையும் நோக்கங்களையும் அறிந்துகொள்வது மட்டுமல்லாமல், அவை நிறைவேறுவதற்கான அவரது நேரத்தையும் புரிந்துகொள்ள வேண்டியது நமது பொறுப்பாகும். நாம் தேவனுடன் காலத்துக்கு முன்பும் அல்ல, தாமதமாகவும் அல்ல, படிப்படியாக முன்னேறிச் செல்ல வேண்டும்.

நாம் இங்கு விவாதிப்பதைப் பற்றி தாவீது ராஜாவின் வாழ்க்கையில் நடந்த இரண்டு நிகழ்வுகள் தெளிவாக விளக்குகின்றன. இஸ்ரவேலர்கள் அனைவர் மீதும் ராஜாவாக இருக்கும்படி தேவன் தாவீதை நியமித்திருந்தார். தாவீது சிறுவனாக இருந்தபோதே, சாமுவேல் தீர்க்கதரிசியால்

அபிஷேகம் செய்யப்பட்டான்— எண்ணெயால் அபிஷேகம் செய்யப்படுவதென்பது, தேவன் தாவீதை ராஜாவாக்கும்படி தெரிந்துகொண்டார் என்பதைக் குறிக்கிறது. தாவீது கோலியாத்தின் மீது ஜெயம் பெற்று, தேசிய அளவிலான ஒரு நாயகனானப் பிறகும், அவன் தனது உயிரைப் பாதுகாக்க சவுல் ராஜாவிடமிருந்து தப்பி ஓட வேண்டியிருந்தது. தாவீது, வேட்டையாடத் தேடப்படும் ஒரு காட்டு மிருகத்தைப்போல, நிலையற்று அலைந்து திரிந்து குகைகளில் வாழ்ந்தான். பல ஆண்டுகள் கடந்துவிட்டன, ஆனால் தாவீது இந்தக் காலங்கள் முழுவதும் தன் தேவனுக்கு உண்மையாக இருந்தான். இறுதியில், சவுல் ராஜா ஒரு யுத்தத்தில் கொல்லப்பட்டான். தாவீது இதைக் கேள்விப்பட்டபோது, சவுலுக்காகவும் அவன் வீட்டாருக்காகவும் அவன் அதிக வருத்தப்பட்டான். இதைத் தொடர்ந்து, *"... பின்பு தாவீது கர்த்தரை நோக்கி: நான் யூதாவின் பட்டணங்கள் ஒன்றிலே போய் இருக்கலாமா என்று விசாரித்தான், அதற்குக் கர்த்தர்: போ என்றார்; எவ்விடத்திற்குப் போகலாம் என்று தாவீது கேட்டதற்கு, அவர்: எப்ரோனுக்குப் போ என்றார். அப்பொழுது யூதாவின் மனுஷர் வந்து, அங்கே தாவீதை யூதா வம்சத்தாரின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள் ..."* (2 சாமுவேல் 2:1-4) என்ற நிகழ்வை நாம் காணலாம்.

சரியான நேரத்தில் சரியான செயலைச் செய்தது, தாவீது யூதாவின் ராஜாவாக அங்கீகரிக்கப்பட வழிவகுத்தது. அவன் சீக்கிரத்திலேயே இஸ்ரவேல் முழுவதற்கும் ராஜாவாக அங்கீகரிக்கப்பட்டான். காலப்போக்கில், தாவீது தேவனுடைய சித்தத்திற்கு ஏற்றபடியும் அவருடைய நேரத்திற்கு ஏற்றபடியும் நடக்க விரும்பிய ஒரு மனுஷனாக இருந்ததை நாம் காண்கிறோம். அவர் சிங்காசனத்தில் உட்கார வைக்கப்படுவார் என்பது முன்குறிக்கப்பட்டிருந்தாலும் கூட, அங்கு சென்று அதை அடைவதற்கு அவர் அவசரப்படவோ அல்லது காரியங்களைத் துரிதப்படுத்தவோ இல்லை. தேவன் தமது காலத்தில் தமது திட்டங்களை வெளிப்படுத்த

அவர் இடங்கொடுத்தார். மேலும், தாவீது தேவனுடன் ஒரு நேரத்தில் ஒரு அடி மாத்திரம் எடுத்து வைப்பதன் முக்கியத்துவத்தை கற்றுக்கொண்டார். எப்ரோனுக்குச் செல்ல அவன் எவ்வளவு கவனமாக இருந்தான் என்பதைக் கவனியுங்கள். அவன் சரியான நேரத்தில் சரியான செயலைச் செய்தபோது,காரியங்கள் அவனுக்கு சாதகமாக நடக்க ஆரம்பித்தன. சரியான நேரத்தில் சரியான செயல்களைச் செய்வது, உங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்களின் நிறைவேறுதலைக் காண உங்களை நிலைநிறுத்தும்.

தாவீதின் வாழ்க்கையில் நடந்த இரண்டாவது நிகழ்வு மிகவும் துரதிர்ஷ்டவசமானது, ஏனென்றால், தாவீது தேவனுடன் முறையாக அடியெடுத்து வைப்பதிலும் சரியான காலத்தில் நேர்த்தியாக நடப்பதிலும் எப்படி தவறினான் என்பதையும், இவ்வாறு காலத்தைத் தவறவிட்டதன் கடுமையான விளைவுகளையும் இது காட்டுகிறது.

2 சாமுவேல் 11:1,2

**[1] மறுவருஷம் ராஜாக்கள் யுத்தத்திற்குப் புறப்படுங்காலம் வந்தபோது, தாவீது யோவாபையும், அவனோடேகூடத் தன் சேவகரையும், இஸ்ரவேல் அனைத்தையும், அம்மோன் புத்திரரை அழிக்கவும், ரப்பாவை முற்றிக்கைபோடவும் அனுப்பினான். தாவீதோ எருசலேமில் இருந்துவிட்டான்.**

**[2] ஒருநாள் சாயங்காலத்தில் தாவீது தன் படுக்கையிலிருந்து எழுந்து, அரமனை உப்பரிகையின்மேல் உலாத்திக்கொண்டிருக்கும்போது, ஸ்நானம்பண்ணுகிற ஒரு ஸ்திரீயை உப்பரிகையின்மேலிருந்து கண்டான்; அந்த ஸ்திரீ வெகு சௌந்தரவதியாயிருந்தாள்.**

அது ராஜாக்கள் தங்கள் சேனைகளோடு யுத்தத்துக்குப் புறப்படும் காலமாக இருந்தது. ஆனால் தாவீது தன் சேனைகளை யுத்தத்திற்கு அனுப்பிவிட்டு, தான் மட்டும் அரண்மனையிலேயே இருந்து விடலாம் என்று தீர்மானித்தான். அவன் தவறான நேரத்தில் தவறான இடத்தில் இருந்தான். அவன் அழகாய் இருந்த பத்சேபாளைக்

கண்டு, அவளுடன் விபச்சாரம் செய்தான். இந்தச் செயல் அவனுக்கு மனமடிவையும் வருத்தத்தையும் ஏற்படுத்தியது. தாவீது தன் சேனைகளுடன் யுத்தத்திற்குச் செல்ல வேண்டிய நேரத்தில் செல்ல வேண்டாம் என்று தீர்மானித்த, ஒரு சாதாரண தவறுதான் இந்தத் தோல்விக்குக் காரணம் என்பதை நாம் காணலாம். தவறான நேரத்தில் அவனைத் தவறான இடத்தில் நிறுத்தும் ஒரு தீர்மானத்தை அவன் எடுத்தான்.

நான்கு சுவிசேஷங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளபடி, நம்முடைய கர்த்தராகிய இயேசு தம்முடைய வாழ்க்கையை ஒழுங்குபடுத்திய விதத்தைப் பார்க்கும்போது, அவர் தமது வாழ்க்கைக்கான பிதாவின் கால நேரத்தைப் பற்றி உணர்ந்துகொண்டதையும் அதைத் துல்லியமாக அறிந்திருந்ததையும் காண்கிறோம். இயேசு தம்முடைய ஊழியத்தைத் தொடங்குவதற்காக 30 வருடங்கள் காத்திருந்ததற்கு முதன்மையான காரணம், தம்முடைய வேளை இன்னும் வரவில்லை என்பதை அவர் அறிந்திருந்தார் என்பதுதான் — பிதா தமக்காக நியமித்திருந்த ஊழியத்தில் அவர் காலடி எடுத்து வைத்து முன்னேறும் நேரம்தான் இந்த (யோவான் 2:4) வசனத்தில் குறிப்பிடப்பட்ட காலம். ஏசாயா 61-ல் உள்ள வல்லமைவாய்ந்த வார்த்தைகளை வாசித்து இயேசு தமது ஊழியத்தைத் தொடங்கினார். அந்தத் தீர்க்கதரிசனப் பகுதியை வாசித்த இயேசு, *“உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றையத்தினம் நிறைவேறிற்று”* (லூக்கா 4:21) என்று தமக்கு முன்பாக அங்கு கூடிவந்திருந்தவர்களுக்கு அறிவித்தார். தம்முடைய ஊழியத்தைத் தொடங்குவதற்கான தேவனுடைய நேரத்தை இயேசு மிகத் தெளிவாக அறிந்திருந்தார். அவருடைய செய்தியும் சரியான நேரத்தில் வெளிப்படும் அந்த சமயத்திற்கு ஏற்ற ஒரு வார்த்தையாக இருந்தது. அவர் மனந்திரும்புதலைக் குறித்துப் பிரசங்கிக்கும்படி வந்து, *“காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று;*

*மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்"* (மாற்கு 1:15) என்று சொன்னார். அவர் ஒரு புதிய காலத்தின் தொடக்கத்தை அறிவித்துக்கொண்டிருந்தார், அவருடைய செய்தி அந்த நேரத்தில் தேவன் பூமியில் செய்து கொண்டிருந்த கிரியைக்கு நேராக ஜனங்களின் கவனத்தை ஈர்த்தது. அவர் அந்தக் காலத்துக்கு ஏற்ற ஒன்றைப் பிரசங்கித்துப் பிரகடனம் செய்துகொண்டிருந்தார். பூமியில் தேவனுடைய அப்போதைய மற்றும் அதற்குப் பின்பு நடக்கவிருந்த காரியங்களைப் பற்றியும், பிதாவானவர் செய்துகொண்டிருந்த மற்றும் செய்யவிருந்த விஷயங்களைப் பற்றியும் அவர் முழுமையாக அறிந்திருந்தார். ஜனங்கள் ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கும் ஒரு காலத்தின் தொடக்கத்தைக் குறிக்கவும் (யோவான் 4:21,23) மற்றும் தாம் மரித்தோரிலிருந்து வரவிருக்கும் உயிர்த்தெழுதலைக் குறிக்கவும், *"காலம் வருகிறது"* என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார் (யோவான் 5:25). வேறொரு இடத்தில், அவர் தம் சீஷர்களிடம் உவமைகள் மூலமாகப் பேசாமல், பிதாவைப் பற்றி நேரடியாகப் பேசக்கூடிய காலம் வரும் என்று சொல்லி இனி வரும் காலத்தைப் பற்றிப் பேசினார் (யோவான் 16:25).

தேவனுடைய குறிப்பிட்ட அசைவாடுதல் அல்லது கிரியைகள் அல்லது பகிர்ந்தளித்தல் பூமியில் வெளியிடப்படுவதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் நியமிக்கப்பட்டிருக்கிறது என்பதை இதிலிருந்து நாம் அறிந்துகொள்கிறோம். இயேசு தாம் சிலுவையில் அறையப்படுவதற்கான காலத்தைப் பற்றியும் அறிந்திருந்தார்—அது அவருக்கு ஒரு ஆச்சரியமான நிகழ்வாக இல்லை. அவருடைய சீஷர்கள் சிதறியடிக்கப்பட்டு, அவர்கள் தம்மைக் கைவிடும் காலமும் (யோவான் 16:32), தாம் சிலுவையில் அறையப்படும் காலமும் (யோவான் 13:1; யோவான் 17:1) வந்துவிட்டது என்பதை அவர் அறிந்திருந்தார். உண்மையில், தாம் சிலுவையில்

அறையப்படும் காலம் சீக்கிரத்தில் வரவிருக்கிறது என்பதை அறிந்து, அவர் தமது வாழ்க்கைக்கான காரியங்களை ஒழுங்குபடுத்திக் கொண்டார் (யோவான் 16:32). மேலும், *"... அவருடைய வேளை இன்னும் வராதபடியினால் ஒருவனும் அவர்மேல் கைபோடவில்லை"* (யோவான் 7:30; யோவான் 8:20) என்று வேதம் கூறுகிறது. நமது எஜமானருடைய வாழ்க்கையைப் பற்றிய இந்த விரைவான கண்ணோட்டத்திலிருந்து, அவர் பிதாவின் திட்டங்களையும் காலத்தையும் உணர்ந்து பூமியில் தமது வாழ்க்கையை வாழ்ந்ததைக் காண்கிறோம். அவரைப் பின்பற்றுவது நமக்கு ஒரு சவாலாக இருக்கிறது.

நம் வாழ்க்கையை நாம் எப்படி ஒழுங்குபடுத்துகிறோம்? நாம் வரும்நாட்களில் நம் பிதாவோடும் அவர் நமக்காக வைத்திருக்கும் திட்டங்களுடனும் படிப்படியாக ஏற்ற காலத்தில் அவருடன் இணைந்து செயல்பட விரும்புகிறோமா? நம்மில் சிலர் தேவனுக்கு முன்னால் செயல்படக்கூடியவர்களாக இருக்கிறோம். கர்த்தரிடத்தில் காத்திருப்பது மட்டுமல்லாமல் கர்த்தருக்காகக் காத்திருக்கும் நற்பண்பையும் நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும். *"... உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு நீர் செய்பவைகளை ..."* (ஏசாயா 64:4) என்று காத்திருக்கிறவர்களைக் குறித்து வேதாகமம் போதிக்கிறது. எனது இளம் வாலிபப் பருவத்தின் ஆரம்பத்தில், கர்த்தர் என் வாழ்க்கையில் முதன்முதலாக கிரியை செய்யத் தொடங்கியபோது, பல சந்தர்ப்பங்களில், ஊழியத்தின் பல பகுதிகளிலும், நிறைய வழிகளிலும் என் பாதையை நான் வலுக்கட்டாயமாக அமைத்துக்கொண்டேன். நிச்சயமாக, இந்தப் புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களைப் பற்றி நான் அறியாதவனாய் இருந்தேன் என்பதை அறிந்திருந்த தேவன் என் மீது இரக்கமுள்ளவராக இருந்தார், மேலும் அதைக் கற்றுக்கொள்ளவும் அவர் எனக்கு உதவினார். ஆனால் அந்நாட்களிலும் கூட, வெளிப்படுத்தப்பட்ட

பரிசுத்த தைரியத்தையும் முன்முயற்சியையும் தேவன் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் ஆசீர்வதிப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். அந்த ஆரம்ப நாட்களின் முயற்சியின் விளைவுதான் தற்போதைய கனி. நாம் விவாதித்துக்கொண்டிருக்கும் சத்தியங்களைப் புரிந்துகொண்டதால், இப்போது தேவனுடைய துல்லியமான நேரத்தைக் கற்றுக்கொள்வது ஒரு பொறுப்பாக இருக்கிறது. தேவன் நம்மை செய்யச் சொல்லி வழிநடத்தும் காரியங்களில், அது நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையாக இருந்தாலும் சரி, ஊழியமாக இருந்தாலும் சரி, அல்லது நமது தொழில்களில் இருந்தாலும் சரி, நாம் அவருடைய திட்டம் மற்றும் நேரம் ஆகிய இரண்டையும் அறிந்துகொள்ளமுயற்சிக்கவேண்டும். பயிற்சிசெய்வதற்கும் ஆயத்தப்படுவதற்கும் தேவன் ஒரு குறிப்பிட்ட காலத்தை வைத்திருக்கிறார் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். தேவன் தமது "யுத்தத்திற்கு ஆயத்தப்படும் ஜனங்களுக்கு" "ஊழியத்தின் மூலம்" பயிற்சி அளிக்கிறார். சில நேரங்களில், பயத்தின் காரணமாக சில நிகழ்வுகள், இடங்கள் அல்லது அனுபவங்களை நாம் தவிர்க்க முயல்கிறோம். நாம் எப்படி நடந்துகொள்வோம் என்று பயப்படுகிறோம் அல்லது தெரியாத நபர்களைக் குறித்துப் பயப்படுகிறோம். ஆனால் சில சமயங்களில், வெற்றி பெறவும், கற்றுக்கொள்ளவும், செயல்பாட்டில் தேறினவர்களாய் இருக்கவும் அந்தக் குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்குள் நாம் கடந்து செல்ல வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். வாழ்க்கையில் இந்தச் சூழ்நிலைகள் மாறின பாதையாகவோ அல்லது தேவையற்ற தாமதங்களாகவோ தோன்றலாம். ஆனால் தேவன் இவற்றை நமது நன்மைக்காக மாற்றிவிடுகிறார்.

"பிடிவாதமாக" இருப்பவர்களுக்கு பல ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன. இவர்கள் தயங்குபவர்களும், தங்களுக்குத் தெரிந்த மற்றும் பழக்கமான—கடந்த காலத்தை விட்டுவிட விரும்பாதவர்களும் மற்றும் தேவனுடைய புதிய

திட்டங்களில் அடியெடுத்துவைக்க விரும்பாதவர்களுமாய் இருக்கிறார்கள். தேவனுடைய புதிய திட்டங்கள் புதியவையும் பரிச்சயமற்றவையுமாய் இருப்பதால், தேவன் தற்போது என்ன செய்கிறார் என்பதைப் புரிந்துகொண்டு அதற்கு ஏற்ப செயல்பட, அவர்களுக்கு நம்பிக்கையும் தைரியமும் தேவைப்படுகிறது.

தேவன் இன்றைய நாட்களில் பூமியில் என்ன செய்துகொண்டிருக்கிறார் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். நம்மிடம் ஒப்படைக்கப்பட்டவர்களை தேவனுடைய கால நேரத்தின்படி ஆயத்தப்படுத்த, நமக்காக ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கிற அந்தப் பகுதிகளிலும் வழிகளிலும் அவர்களை வழிநடத்தும் பொறுப்பு தலைமைத்துவத்தில் உள்ளவர்களாகிய நமக்கு இருக்கிறது.

# 3

# காலங்கள் மற்றும் சமயங்களைப் புரிந்துகொள்ளுதல்

**1 நாளாகமம் 12:32அ**

**இசக்கார் புத்திரரில், இஸ்ரவேலர் செய்யவேண்டியது இன்னதென்று அறிந்து காலாகாலங்களுக்குத் தகுந்த, ...**

மேற்கூறிய வசனம், காலத்தைப் புரிந்துகொண்ட ஒரு குறிப்பிட்ட ஜனங்களைக் குறிக்கிறது. அவர்களுக்கு *'கெய்ரோஸ்'* தருணங்கள் தெரிந்திருந்தது. தங்களின் காலத்திற்கு ஏற்ற செயல் எது என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். காலங்களையும் சமயங்களையும் புரிந்துகொள்வது நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிய நமக்கு உதவும். நமது தனிப்பட்ட வாழ்க்கையில் பல்வேறு நிகழ்வுகள் உள்ளன, அதற்காக, நாம் தேவனுடைய நேரத்தை நாட வேண்டும்—உதாரணமாக, ஒரு ஊழியத்தைத் தொடங்குதல், திருமணம், தொழிலில் மாற்றம் செய்தல், சுவிசேஷத்திற்காக திட்டமிட்டபடி இடம்பெயர்தல் அல்லது புதிய தொழிலில் அடியெடுத்து வைத்தல் போன்ற காரியங்களில் தேவனுடைய நேரத்தை நாட வேண்டும். வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில "சமயங்களை" நாம் ஆராய்ந்து பார்ப்போம்.

## தேவனுடைய புதிய செயல்பாட்டிற்கான நேரம்

தேவனுடைய கிரியைகள், செயல்பாடுகள் மற்றும் ஆளுகைகள் பூமியில் வெளியிடப்படுவதற்கு ஒரு குறிப்பிட்ட நேரம் இருப்பதாக நாம் முன்பே குறிப்பிட்டோம். தேவன் ஒழுங்கும் கிரமமும் இல்லாத வகையில் செயல்படுவதில்லை. மாறாக, அவர் பூமியில் நிறைவேற்ற

விரும்பும் ஒரு புதிய கிரியையைத் தொடங்குவதற்கும் வெளியிடுவதற்கும் ஒரு முன்குறிக்கப்பட்ட நேரம் உள்ளது. பல சந்தர்ப்பங்களில், இயேசு "காலம் வருகிறது" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியபோது, *"எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளுங்காலம் வருகிறது"* (யோவான் 4:21) என்றும், தேவனை *"ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளும் காலம் வரும்"* என்ற உண்மையையும் குறிப்பிடுகிறார் (யோவான் 4:23). அத்தகைய ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். மேலும், மனித சாயலான தேவ குமாரன் மூலம் சாத்தான் நசுக்கப்பட்டு தோல்வியடைந்தது வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட நேரத்தைக் கொண்டிருந்தது. இந்த முன்குறிக்கப்பட்ட நேரம் வந்துவிட்டது என்று இயேசு அறிந்தபோது, அவர், *"இப்பொழுதே இந்த உலகத்துக்கு நியாயத்தீர்ப்பு உண்டாகிறது; இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான்"* (யோவான் 12:31) என்று அறிவித்தார். யோவேல் 2:28 மற்றும் அப்போஸ்தலர் 2:17 ஆகிய இரண்டிலும், *"கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்"* என்று கூறப்பட்டபடி, தேவனுடைய ஆவி பெருமளவில் பொழிந்தருளப்படுதலின் காலத்தில் நாம் வாழ்கிறோம். மாம்சமான யாவர் மீதும் ஊற்றப்பட இருக்கிற தேவனுடைய ஆவியின் இந்த ஊற்று, தேவனுடைய நாட்காட்டியில் *"கடைசி நாட்கள்"* என்று அழைக்கப்படும்—நாம் வாழும் நாட்களின் காலத்திற்கான தேவனுடைய கிரியைக்கென்று முன்குறிக்கப்பட்டுள்ளது மற்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

பூமியில் தேவனுடைய செயல்கள் அல்லது கிரியைகள் பற்றி நாம் புரிந்துகொள்ள வேண்டிய பல விஷயங்கள் உள்ளன.

## *எந்த ஒரு காலகட்டத்திலும் பூமியின் மீது ஆவியானவரின் ஒன்றுக்கும் மேற்பட்ட “செயல்கள்” வெளிப்படலாம்*

உதாரணமாக, நாம் வாழும் காலம், ஆவியோடும் உண்மையோடும் தேவனை ஆராதிப்பதற்கான காலம் மட்டுமல்ல, ஆவியானவரின் பெருமழையைப் பெறுவதற்கான காலமும் இதுவேயாகும். இதை நாம் தெரிந்துகொள்வது மிகவும் அவசியம். இந்த உண்மையை அறியாத பலர் தங்களைத் தாங்களே மட்டுப்படுத்திக் கொண்டுள்ளனர், இதனால், தேவன் பூமியில் செய்துகொண்டிருக்கும் பல காரியங்களில் ஒன்றிற்கு மட்டுமே தங்கள் வாழ்க்கையில் முக்கியத்துவமளித்து தேவனுடைய கிரியையை மட்டுப்படுத்திக்கொண்டனர் மற்றும் மாற்றியமைத்துக்கொண்டனர். பின்னர், அவர்கள் மட்டுப்படுத்தின தங்களது புரிதலையும் கண்ணோட்டத்தையும் தேவன்தாம் அவ்வாறு கிரியை செய்கிறார் என்பதுபோல முன்வைக்கிறார்கள், இது நிச்சயமாக ஆரோக்கியமற்ற நிலைப்பாட்டைக் குறிக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாம், தேவன் என்ன செய்கிறார் என்பதை அறிந்துகொள்ளக் கூடியவர்களாகவும் ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். நம் வாழ்வின் மூலம் தேவன் எவைகளைச் செய்து நிறைவேற்ற விரும்புகிறாரோ அவை அனைத்திற்கும் நாம் இணங்கிச் செல்லவும் மற்றும் இடமளிக்கவும் வேண்டும். பல்வேறு அம்சங்களில் தேவன் என்ன செய்கிறார் என்பதில் சிலவற்றைக் குறிப்பிட, “வார்த்தை இயக்கம்” என்பதைக் குறித்து நாம் பார்த்தோம், அதில் விசுவாசம், தெய்வீக சுகம், மீட்பு, செழிப்பு என்பன போன்ற தலைப்புகளில் தேவனுடைய வார்த்தையை விரிவாகக் கற்பிப்பதற்கு அதிக முக்கியத்துவம் அளித்திருந்தனர். பின்னர், உலக அளவிலான ஊழியங்கள், திருச்சபை வளர்ச்சி, துதி மற்றும் ஆராதனை, குடும்பம், சமூகம் / அரசியல் செயல்பாடுகள், ஆவிக்குரிய யுத்தம், தீர்க்கதரிசனம் மற்றும் அப்போஸ்தலத்துவத்தின்

முக்கியத்துவம் போன்றவற்றுடன் ஓரளவு புதிய செயல்பாடுகள் எழுந்தன. திறந்த உள்ளத்தோடு, நீங்கள் அறிந்திராத காரியங்களாய் இருந்தாலும், தேவன் உங்கள் மத்தியில் செய்துகொண்டிருக்கும் பல்வேறு விஷயங்களைப் பிடித்துக்கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கையில் உங்களையோ அல்லது தேவனுடைய கிரியையையோ மட்டுப்படுத்தாதீர்கள். தேவன் செய்துகொண்டிருக்கும் ஒரு வித்தியாசமான வேலையில் நீங்கள் ஈடுபட்டிருப்பதால், வித்தியாசமான "மொழி" பேசும் மற்றவர்களுடன் சகிப்புத்தன்மையுடன் இருங்கள்.

## *தேவனுடைய ஒவ்வொரு செயலும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவேற்றும்*

இன்றைய நாட்களில் ஆவி ஊற்றப்படுவதற்கான நோக்கங்கள் என்ன என்பதை இயேசு தெளிவாகக் கூறியுள்ளார், *"நீங்கள்... பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்"* (அப்போஸ்தலர் 1:8). தேவன் அந்தக் காரியத்தை ஏன் செய்கிறார் என்பதை நாம் ஆராய்ந்து பார்த்துப் புரிந்துகொள்ள வேண்டும். இல்லையெனில், "நோக்கத்தை" தவறவிட்டுவிட்டு "செயலுக்கான இடத்தில்" பங்குகொள்வதற்கான வாய்ப்பு உண்டு. தேவன் கொண்டிருக்கும் நோக்கங்களை நிறைவேற்றும் செயல்பாட்டில் நமது முயற்சிகளை மதிப்பிடுவதற்கும் இது நமக்கு உதவும்.

## *தேவனுடைய ஒவ்வொரு செயலும் அவருடைய மற்றொரு செயலை நிறைவேற்றுகிறது*

தேவனுடைய வெவ்வேறு செயல்கள் ஒன்றுக்கொன்று முரண்படுவதில்லை, மாறாக தேவன் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் உள்ளடக்குகின்றன. உதாரணமாக, பரிசுத்த ஆவியானவரின் ஊற்றப்படுதல் நாம் சாட்சிகளாக இருக்க

உதவுவது மட்டுமல்லாமல், ஆவியோடும் உண்மையோடும் தேவனை ஆராதிக்கவும் நமக்கு உதவுகிறது. தேவனை ஆவியோடு ஆராதிப்பது பிதாவைப் பிரியப்படுத்துவதாக இருக்கிறது என்பது மட்டுமல்லாமல், சத்துருவுக்கு எதிரான ஆயுதமாகவும் இருக்கிறது, மேலும் சுவிசேஷத்தை தூரத்தில் உள்ள பகுதிகளுக்கு எடுத்துச் சென்று அறிவிக்கவும் உதவுகிறது. எனவே, வெவ்வேறு வேலைகளில் ஈடுபட்டுள்ளவர்களிடம் பழகி, அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள், இதனால் உங்கள் வாழ்க்கை மேம்படுத்தப்படும்.

## *தேவனுடைய கடந்தகாலக் கிரியையில் தொடர்ந்து வாழும்போது, ஜனங்கள் தவறுசெய்ய வாய்ப்புள்ளது*

தேவனுடைய முந்தைய காலத்தின் செயல்பாடுகளை அறிவது முக்கியம் என்றாலும், நாம் கடந்த காலக் கிரியையில் வாழ்ந்துவிடக் கூடாது. வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குப் பயணம் செய்த இஸ்ரவேலரின் உதாரணத்தைக் கவனியுங்கள். பல சந்தர்ப்பங்களில், அவர்கள் சோர்ந்துபோனார்கள். அவர்கள் தேவனுக்கும் மோசேக்கும் எதிராக முறுமுறுத்து முறையிட்டனர். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், கர்த்தர் பல ஜனங்களைக் கொன்று குவிக்கும்படி சர்ப்பங்களை பாளையத்திற்குள் நுழைய அனுமதித்தார். ஜனங்கள் மனந்திரும்பியபோது, ஒரு வெண்கல சர்ப்பத்தை உருவாக்கி அதை ஒரு கம்பத்தின் மீது வைக்கும்படி தேவன் மோசேக்குக் கட்டளையிட்டார், அதனால் *"கடிக்கப்பட்டவன் எவனோ அவன் அதை நோக்கிப் பார்த்தால் பிழைப்பான்"* (எண்ணாகமம் 21:1-9). அதனால், அது அப்படியே நடந்தது. வரலாற்றில் சில நூறு ஆண்டுகாலம் பின்சென்று, மோசே செய்த வெண்கல சர்ப்பத்தை ஆராதனைப் பொருளாகப் பயன்படுத்தி, இஸ்ரவேல் ஜனங்கள் தூபம் காட்டினதைக் காண்கிறோம் (2 இராஜாக்கள் 18:4). தேவனுடைய ஜனங்கள் மத்தியில்

இருந்த இந்தக் கொடிய பொல்லாப்பை அழிக்க தேவன் எசேக்கியா ராஜாவை எழுப்பினார். தேவனுடைய கடந்த கால செயலின் நினைவுச் சின்னங்களை சிலை வழிபாட்டுக்கு ஆதாரமாக உறுதியாகப் பற்றிக்கொண்டவர்கள் இன்றும் பலர் உள்ளனர். இது தேவனைப் பிரியப்படுத்துவதாய் இராமல், தவறுக்கும் ஏமாற்றத்திற்கும் வழிவகுக்கிறது.

## *தேவன் செய்யும் புதிய கிரியையில் அடியெடுத்து வைக்க விருப்பமில்லாமல் இருந்தால் அதிக விலைக்கிரயம் செலுத்த வேண்டியிருக்கும்*

பல சமயங்களில், தேவன் ஒரு குறிப்பிட்ட வழியில் செயல்படுவதையும் அவருடைய பிரசன்னத்தை வெளிப்படுத்துவதையும் நாம் பார்த்து, அந்த “வழிக்கு” நாம் மிகவும் பழகிவிட்டதால், தேவன் செயல்படும் அந்தக் குறிப்பிட்ட வழியை மட்டுமே நாம் பிடித்துக்கொள்ள ஆரம்பிக்கிறோம். தேவன் நிகழ்காலத்தில் செயல்பட விரும்பும் புதிய வழியை நாம் ஏற்றுகொள்ளத் தவறுகிறோம். பழைய ஏற்பாட்டின் மிகப் பெரிய தலைவரான மோசேயைக் கவனியுங்கள். கன்மலையை அடிக்கும்படி தேவன் அவனுக்கு அறிவுறுத்திய ஒரு நேரம் இருந்தது, அவன் அப்படியே, செய்தான்; தாகத்தால் வாடிய இஸ்ரவேலரின் தாகத்தைத் தணிக்க தண்ணீர் பாய்ந்து வந்தது (யாத்திராகமம் 17:1-7). சில ஆண்டுகளுக்குப் பிறகு, ஜனங்களுக்குத் தண்ணீர் தேவைப்பட்டபோது, மோசேயும் இதேபோன்ற சூழ்நிலையை எதிர்கொண்டார். இருப்பினும், இந்த முறை அவனது கோலை வைத்துக் கன்மலையை அடிப்பதற்குப் பதிலாக, அதைப் பார்த்துப் பேசும்படி தேவன் அறிவுறுத்தினார். முறுமுறுத்த இஸ்ரவேலர்களால் மோசே மிகவும் கோபமடைந்து, அதனுடன் பேசுவதற்குப் பதிலாக கோலை வைத்து அடித்துவிட்டான். அவன் அதை இரண்டு முறை அடித்தான் (எண்ணாகமம் 20:1-13). நிச்சயமாக, தண்ணீர் புறப்பட்டு வந்தது, ஆனால்

அவிசுவாசம் மற்றும் கீழ்ப்படியாமைக்கான விளைவை மோசே அனுபவிக்க வேண்டி வந்தது. அந்த நேரத்தில், மோசே முன்பு செய்ததையே மீண்டும் செய்வது மிகவும் சுலபம் என்று உணர்ந்தான், மேலும் அது பலனளிக்கும் என்று அறிந்து வைத்திருந்தான். கன்மலையுடன் பேசுவது "அவனுக்கு சௌகரியமானதாக" இல்லை. ஒரு வேளை, அந்த அற்புதங்களுக்குக் காரணம் தன் கோல் அல்ல, தேவன்தான் என்பதை அவன் மறந்துபோயிருக்கலாம். மோசே தனது அவிசுவாசத்தால் கடுமையான விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. முடிவு ஒரே மாதிரியாக இருக்கும் என்றாலும் கூட, தேவன் கிரியை செய்ய விரும்பும் புதிய வழிகளுக்கு நம் மனதை நாம் திறந்து வைத்திருக்கிறோமா?

## ஒரு தரிசனம் நிறைவேறும் காலம்

**ஆபகூக் 2:2,3**

**2 அப்பொழுது கர்த்தர் எனக்குப் பிரதியுத்தரமாக: நீ தரிசனத்தை எழுதி, அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படிப் பலகைகளிலே தீர்க்கமாக வரை.**

**3 குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது; அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை.**

தேவன் உங்கள் இருதயத்திலும் வாழ்க்கையிலும் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் நிறைவேறுவதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் எடுத்துக்கொள்கிறது. இந்த செயல்முறை ஒரு பெண் தன் குழந்தையைப் பெற்றெடுப்பதைப் போன்றது. கருத்தரித்தல் நிகழ்வு உள்ளது—தேவன் தம்முடைய கனவு, தமது யோசனை, தமது உத்தி மற்றும் தமது திட்டத்தை உங்கள் இருதயத்தில் வைக்கிறார். பிறகு அந்தத் திட்டத்திற்கு ஏற்ப ஒரு தனிநபராக நீங்களும் பிற தேவையான நிகழ்வுகளும் சீரமைக்கப்பட்டு அதன் வளர்ச்சிக்கான காலகட்டம் பின்தொடர்கிறது. இறுதியாக பிறப்பதற்கான நேரம் வருகிறது—தரிசனம் உண்மையாகிறது. ஆனால்

நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், தரிசனம் கொடுக்கப்பட்ட தருணத்திலிருந்து அது உண்மையிலேயே நிறைவேறும்வரை காத்திருக்கும் காலம், அதாவது ஒரு தொடர் காலம்—இருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்தக் காலகட்டத்தில்தான் தரிசனம் நிறைவேறுவதற்கான அடித்தளத்தை அமைக்க தேவன் நமக்கு உதவுகிறார். தரிசனம் நிச்சயம் நிறைவேறும் என்ற நம்பிக்கையுடன் நமது அப்போதைய வேலையில் நாம் விடாமுயற்சியுடன் இருக்க வேண்டும். இந்தக் காத்திருப்பு காலத்தில், தேவன் நமக்குத் தேவையான எல்லாவற்றையும், அதாவது தரிசனத்தை நிறைவேற்றுவதற்கு நமக்கு உதவக் கூடிய, ஜனங்களையும் இடங்களையும் மற்றும் பொருள்களையும் நமக்குத் ஒருங்கிணைத்துத் தருகிறார். நாம் ஆயத்தமானவுடன், விஷயங்கள் சீரமைக்கப்படுகிறது, அப்போதுதான் ‘கெய்ரோஸ்’ தருணம், அதாவது தரிசனம் நிறைவேறும் நேரம் வருகிறது.

## பலன்களை அனுபவிக்கும் காலம்

**சங்கீதம் 1:3அ**

**தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்.**

அதனதன் பருவத்தில் பழங்கள் விளைகின்றன. நமது உழைப்பின் பலனைக் கண்டு அனுபவிக்கும் ஒரு காலம் இருக்கிறது என்பதை இது உணர்த்துகிறது. நம்மில் சிலர் கர்த்தர் நம்மை அழைத்த ஒரு குறிப்பிட்ட பகுதியில் விடாமுயற்சியுடன் உழைத்துக்கொண்டிருக்கலாம். பெரும்பாலும், நாம் உடனடியாக பலன்களைப் பார்க்கவில்லை என்றால், அல்லது அந்தக் குறிப்பிட்ட விஷயத்தில், நாம் எதிர்பார்த்த நேரத்தில் பலன்களைக் காண முடியாதபோது சோர்வடைகிறோம். பலன்தரத்தக்க பருவம் இல்லாத சமயத்தில் பழங்களைத் தேடுவது மனச்சோர்வை ஏற்படுத்துவதாய் இருக்கும். அதனதன்

பருவத்தில் பழங்கள் விளைகின்றன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நமது உழைப்பின் பலன்கள் துளிர்விடுவதற்கும், மலருவதற்கும், கனி தருவதற்கும் ஒரு காலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாம் உழைக்கும்போது, விளையச் செய்கிற கர்த்தரை மாத்திரமே நோக்கிப் பார்க்க வேண்டும், ஏனெனில், ஏற்ற காலத்தில் நிறைவான பலனைத் தருபவர் அவரே.

## பரீட்சை மற்றும் சோதனையின் காலம்

லூக்கா 4:13

**பிசாசானவன் சோதனையெல்லாம் முடித்தபின்பு, சிலகாலம் அவரை விட்டு விலகிப்போனான்.**

எபேசியர் 6:13

**ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.**

ஒரு விசுவாசிக்கு எதிராக தனது தாக்குதலை கட்டவிழ்த்துவிட, பிசாசு “சரியான நேரங்கள்” என்று பார்க்கும் நேரங்களும் சமயங்களும் உள்ளன. பிசாசு தக்க தருணங்களில் தனது தாக்குதலைத் திட்டமிடுகிறான். இத்தகைய காலங்கள் *“தீங்கு நாட்கள்”* என்றும் குறிப்பிடப்படுகின்றன (எபேசியர் 6:13). சில காரணங்களால், நாம் மிகவும் பாதிக்கப்படக்கூடிய வகையிலான நேரங்களையோ அல்லது எதிரிக்கு ஒரு திறந்த கதவையோ ஏற்படுத்திக்கொடுத்திருக்கலாம். இயேசு அதைச் *“சோதனைக் காலம்”* என்று குறிப்பிட்டார் (லூக்கா 8:13). ஆகவேதான், *“தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருங்கள், விழித்திருங்கள்”* (1 பேதுரு 5:8) என்று நாம் எச்சரிக்கப்படுகிறோம். நமக்கு எதிராகத் தீங்கு நம்மைத் தாக்குவதற்கான குறிப்பிட்ட காலங்களும் சமயங்களும் உள்ளன என்பதை நாம் புரிந்துகொள்வது முக்கியம். மற்ற சந்தர்ப்பங்களை விட

யுத்தம் மிகவும் கடினமாகவும் மோசமாகவும் இருக்கும் காலங்கள் இருக்கலாம். இருப்பினும், நாம் நிலைத்து நின்று, சத்துருவின் ஒவ்வொரு வேலையையும் முறியடிக்க முடியும் என்பது நமக்குத் தெரியும். பொதுவாகவே, இதுபோன்ற தீவிரமான சாத்தானின் தாக்குதல்கள் ஏற்படும் நேரங்கள், நம் வாழ்வில் ஒரு மிகப் பெரிய ஜெயத்தையும் ஒரு முன்னேற்றத்தையும் பெறும்படியாக நாம் விளிம்பில் இருக்கிறோம் என்பதைக் குறிக்கிறது. மேலும், மற்ற விசுவாசிகள் அத்தகைய சமயங்களைக் கடந்து செல்லும்போது, அந்தக் காலத்தைக் குறித்து அதிக அக்கறையுள்ளவர்களாய் இருப்பது, அத்தகைய நேரத்தில் அவர்களுடன் நிற்கவும் அவர்களுக்கு ஆதரவாக இருக்கவும் நமக்கு உதவும். *“தீங்கு நாளில்”* (சங்கீதம் 41:1) மற்றும் *“ஆபத்துக் காலத்தில்”* (சங்கீதம் 37:18,19) தேவன் நமக்கு உதவி செய்வதாக வாக்களித்துள்ளார்.

## அறுவடைக்கான ஒரு காலம்

**அப்போஸ்தலர் 16:6,7**
**6அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்துபோனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்த ஆவியினாலே தடைபண்ணப்பட்டு,**
**7மீசியா தேசமட்டும் வந்து, பித்தினியா நாட்டுக்குப் போகப் பிரயத்தனம்பண்ணினார்கள்; ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார்.**

நமது தேவன் அறுவடை செய்யும்படி விளையச் செய்கிற கர்த்தராய் இருக்கிறார். தேசங்கள் அவருடைய அறுவடை வயல்களாக இருக்கின்றன. அவருடைய அறுவடை வயல்களில் ஒவ்வொன்றும் எப்போது அறுவடைக்கு ஆயத்தமாக இருக்கிறது என்பதை அவர் அறிவார், ஏனெனில் அவை அனைத்தும் ஒரே நேரத்தில் பலனைத் தராது. சுவிசேஷத்தை அறிவிக்கும் நோக்கத்திற்காக சில மாகாணங்களுக்குள் நுழைய முயன்ற பவுல் மற்றும்

அவனது சக ஊழியர்களைப் பரிசுத்த ஆவியானவர் தடுத்து, அதைச் செய்ய அனுமதிக்கவில்லை என்ற அவர்களின் அனுபவங்களை நாம் அறிவோம், ஒரு குறிப்பிட்ட பகுதி சுவிசேஷத்திற்குத் தயாராகாமல் இருக்க பல காரணங்கள் இருக்கலாம். ஒருவேளை, ஜனங்கள் வார்த்தையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லாதிருக்கலாம், எனவே அத்தகைய இடங்களில் ஜெபம் மற்றும் பரிந்துபேசுதலின் மூலம் கிரியை செய்யப்பட வேண்டும். ஒருவேளை, அந்த மாகாணத்தில் ஊழியத்தின் சவால்களை எதிர்கொள்ள ஊழியர்கள் ஆயத்தமாக இல்லாமல் இருந்திருக்கலாம், அல்லது ஒருவேளை, சற்றுத் தாமதமாகச் செயல்படுவதன் மூலம் அதிக அறுவடையைக் காண முடியும் என்று எண்ணலாம். எது எப்படியிருந்தாலும், பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலைப் பின்பற்றி, அவருடன் இணைந்து செயல்பட்டு, தேவனுடைய அறுவடை வயல்களுக்குள் அடியெடுத்து வைக்கையில் நாம் உணர்வுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

## தேவனுடைய வீட்டைக் கட்டி எழுப்புவதற்கான காலம்

ஆகாய் 1:1-4

**[1] ... கர்த்தருடைய வார்த்தை ஆகாய் என்னும் தீர்க்கதரிசியின் மூலமாய் உண்டாகி, அவர் சொன்னது என்னவென்றால்....**

**[2] இந்த ஜனங்கள் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கு ஏற்றகாலம் இன்னும் வரவில்லை என்கிறார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.**

**[3] ஆனாலும் ஆகாய் என்னும் தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர் சொல்லுகிறார்:**

**[4] இந்த வீடு பாழாய்க் கிடக்கும்போது, நீங்கள் மச்சுப்பாவப்பட்ட உங்கள் வீடுகளில் குடியிருக்கும்படியான காலம் இதுவோ?**

ஆகாய் 1:8

**நீங்கள் மலையின்மேல் ஏறிப்போய், மரங்களை கொண்டுவந்து, ஆலயத்தைக் கட்டுங்கள்; அதின்பேரில் நான் பிரியமாயிருப்பேன், அதில் என் மகிமை விளங்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.**

பழைய ஏற்பாட்டில் உள்ள தேவனுடைய ஜனங்கள் தேவனுடைய நேரத்தைத் தவறவிட்டது மட்டுமல்லாமல், அந்தக் காலத்திற்குப் பொருத்தமில்லாத செயல்களைச் செய்ததால் குற்றமனசாட்சியுள்ளவர்களாய் இருந்தனர். தேவாலயத்தைப் புதுப்பித்துக் கட்டுவதைப் புறக்கணித்துவிட்டு சொந்த வீடு கட்டுவதில் மும்முரம் காட்டினர். அதற்கு இணையாக, நம் நாட்களில், தேவன் ஆலயத்தை "செங்கல் மற்றும் வைக்கோல்" கொண்டு அல்ல, அதற்குப் பதிலாக "ஜீவனுள்ள கற்களைக்" கொண்டு கட்டிக்கொண்டிருக்கிறார் என்பதை நாம் அறிவோம். இந்தத் திருச்சபையைத்தான் கட்டப்போவதாக இயேசு சொன்னார், அதற்காகத்தான் வரங்களுடன் கூடிய ஊழியங்களை நியமித்து பரிசுத்தவான்களை அழைத்தார் (எபேசியர் 4:7-11). தங்களது சொந்த தற்காலிக வீடுகளை அல்ல, கர்த்தருடைய திருச்சபையைக் கட்டி எழுப்ப வேண்டியதன் அவசியத்தை அதிகமான ஜனங்கள் உணரத் தொடங்கும் ஒரு காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். தம்முடைய ஜனங்கள் தங்கள் சொந்த வீடுகளைக் (தங்கள் சொந்த ஆடம்பர வாழ்க்கைகள் அல்லது தனியார் கிறிஸ்தவ நிறுவனங்கள்) கட்டுவதை நிறுத்திவிட்டு, முந்தைய காலத்தைப் போன்றுத் திருச்சபையைக் கட்டுவதில் தங்களது முயற்சியை செலவிடுவதற்கு தேவன் தம் மக்களை அழைக்கும் ஒரு காலம் வருகிறது. அதாவது, தியாகமாக வாழ்வது, தாராளமாகக் கொடுப்பது, மற்றும் அச்சமின்றிச் செல்வது போன்ற புதிய வாழ்க்கை முறைகளுக்கு ஏற்ப நாம் தயாராக இருக்க வேண்டும் என்பதே இதன் பொருளாகும்.

## அமைதியான ஆண்டுகள்

**கலாத்தியர் 1:15-18**

**15 அப்படியிருந்தும், நான் என் தாயின் வயிற்றிலிருந்தது முதல், என்னைப் பிரித்தெடுத்து, தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன்,**
**16 தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும்பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்படுத்தப்**

**பிரியமாயிருந்தபோது, உடனே நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனைபண்ணாமலும்;**
**17 எனக்கு முன்னே அப்போஸ்தலரானவர்களிடத்திலே எருசலேமுக்குப்போகாமலும்; அரபிதேசத்திற்குப் புறப்பட்டுப்போய், மறுபடியும் தமஸ்கு ஊருக்குத் திரும்பிவந்தேன்.**
**18 மூன்று வருஷம் சென்ற பின்பு, பேதுருவைக் கண்டுகொள்ளும்படி நான் எருசலேமுக்குப் போய், அவனிடத்தில் பதினைந்து நாள் தங்கியிருந்தேன்.**

கலாத்தியர் 2:1

**பதினாலு வருஷம் சென்றபின்பு, நான் தீத்துவைக் கூட்டிக்கொண்டு பர்னபாவுடனேகூட மறுபடியும் எருசலேமுக்குப் போனேன்.**

தேவனுடைய மனுஷர்களில்—தேவன் எழுப்பிய தலைவர்களில் பலர்—பல “அமைதியான” வருஷங்களை ஆயத்தப்படுவதில் கழித்ததை நாம் வேதம் முழுவதிலும் கவனிக்கிறோம். அந்தக் காலகட்டத்தில் அவர்கள் என்ன செய்தார்கள் என்பது பற்றி அதிகம் கூறப்படாததால், அந்த ஆண்டுகளை நாங்கள் "அமைதியான" காலம் என்று குறிப்பிடுகிறோம். அவர்கள் பயிற்றுவிக்கப்பட்டு, தேவன் அழைத்த அழைப்பிற்கு அவர்கள் தங்களை ஆயத்தப்படுத்திக்கொண்டிருந்தார்கள். பின்னர், அந்த அமைதியான ஆண்டுகளின் முடிவில், தேவன் அவர்களைக்கொண்டு முக்கியமான ஊழியங்களைத் தொடங்கினார். இதை நாம் பவுலின் வாழ்க்கையில் வெளிப்படையாகப் பார்க்கிறோம். அவன் இரட்சிக்கப்பட்டு அப்போஸ்தலனாக அழைக்கப்பட்டான். ஆனால் பல ஆண்டுகளுக்குப் பிறகுதான் அவன் ஒரு அப்போஸ்தல அபிஷேகத்தின் முழுமைக்குள் நுழைந்தான். மனமாற்றத்தைத் தொடர்ந்து, அரபு தேசத்தில் பல ஆண்டுகள் அமைதியாக இருந்தான். ஒருவேளை, 10 ஆண்டுகளுக்குப் பிறகு, அவன் அந்தியோகியாவில்உள்ளஒருதிருச்சபையில்ஒருஆசிரியராக தனது பொது ஊழியத்தைத் தொடங்கியிருக்கலாம். சுமார் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, அவன் தனது அப்போஸ்தல பணியைத் தொடங்க பரிசுத்த ஆவியானவரால்

அழைக்கப்பட்டான் (அப்போஸ்தலர் 13:1-3). தம்முடைய வெளிப்படையான ஊழியத்தைத் தொடங்குவதற்கு முன்பு 30 வருடங்கள் அமைதியாகக் கழித்த நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் வாழ்க்கையிலும் இந்தக் கால கட்டத்தைக் காண்கிறோம். யோசேப்பு சுமார் 13 ஆண்டுகள் காத்திருந்தார், மோசே 40 ஆண்டுகள் காத்திருந்தார், இப்படிப் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. அமைதியான ஆண்டுகள் செயலற்று இருக்கும் காலங்கள் அல்ல, மாறாக, அது ஆயத்தப்படுவதற்கான காலங்கள் என்பதை உணர வேண்டியது அவசியம், அங்கு தேவன் அவர்களை என்ன செய்ய அழைத்திருக்கிறார் என்பதன் முக்கிய அம்சங்களை ஒருவர் கற்றுக்கொள்கிறார். தேவன் ஒருவரை ஆயத்தப்படுத்தும் விதமானது, மற்றொரு நபர் ஆயத்தப்படும் விதத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருக்கலாம். தேவனுடைய “பயிற்சிப் பள்ளி” ஒவ்வொரு தனிநபருக்கும் ஏற்றவாறு உருவாக்கப்பட்டுள்ளது. நம்மில் பலர் பயிற்சிக்கான காலகட்டத்தில் இருக்கிறோம். நாம் இப்போது செய்துகொண்டிருக்கும் அனைத்துமே எதிர்காலத்தில் வரவிருக்கும் அனைத்திற்கும் அடித்தளமாகும். எனவே, ஊழியத்தில் உண்மையாக இருங்கள், எல்லாவற்றிற்கும் மேலாக, கற்றுக்கொள்வதிலும், பயிற்சி செய்வதிலும் மற்றும் ஆயத்தப்படுவதிலும் உண்மையாக இருங்கள்.

# 4

# விவேகத்துடன் நம் வாழ்க்கையை ஒழுங்குபடுத்துதல்

பிரசங்கி 8:5,6

5 … ஞானியின் இருதயம் காலத்தையும் நியாயத்தையும் அறியும்.
6 எல்லாக்காரியத்துக்கும் காலமும் நியாயமும் உண்டு; ஆதலால்
மனுஷனுக்கு நேரிடும் சஞ்சலம் மிகுதி.

லூக்கா 12:54-56

54 பின்பு அவர் ஜனங்களை நோக்கி: மேற்கே மேகம் எழும்புகிறதை நீங்கள்
காணும்போது, மழை வருமென்று சொல்லுகிறீர்கள்; அந்தப்படியுமாகும்.
55 தென்றல் அடிக்கிறதை நீங்கள் காணும்போது உஷ்ணம்
உண்டாகுமென்று சொல்லுகிறீர்கள், அந்தப்படியுமாகும்.
56 மாயக்காரரே, பூமியின் தோற்றத்தையும் வானத்தின் தோற்றத்தையும்
நிதானிக்க உங்களுக்குத் தெரியுமே, இந்தக் காலத்தையோ
நிதானியாமற்போகிறதென்ன?

ஒரு ஞானமுள்ள மனிதனால் எந்த ஒரு பணிக்கும் சரியான நேரத்தையும் சரியான செயல்பாடுகளையும் உணர்ந்துகொள்ள முடியும். ஒவ்வொரு காரியத்திற்கும், அதாவது, ஒரு ஊழியத்தைத் தொடங்குதல், திருமணம், தொழிலில் மாற்றம் செய்தல், சுவிசேஷப் பணிக்காக இடம்பெயர்தல் அல்லது ஒரு புதிய வியாபாரத்தில் அடியெடுத்து வைத்தல் போன்ற எந்த ஒரு வேலைக்கும்—அதைச் செய்வதற்கான சரியான நேரமும் சரியான செயல்பாடுகளும் உள்ளன (செய்ய வேண்டிய சரியானவை). தேவன் நம்மை ஞானமுள்ள ஜனங்களாக—காலம் மற்றும் நியாயம் ஆகிய இரண்டையும் பகுத்தறியக்கூடிய ஜனங்களாக இருக்கும்படி அழைத்துள்ளார்.

நமது வாழ்க்கையின் (தனிநபர்களாகவோ அல்லது கூட்டாகவோ) காலத்தையும் வேளையையும் நிதானித்து அறிவதன் மூலமாக, தகுந்த நடவடிக்கையை சரியான நேரத்தில் எடுப்பதற்கான பொறுப்பு நமக்குள் வருகிறது. *"நித்திரையைவிட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்றென்று, நாம் காலத்தை அறிந்தவர்களாய், இப்படி நடக்கவேண்டும்; ... இரவு சென்றுபோயிற்று, பகல் சமீபமாயிற்று; ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக்கடவோம். ... பகலிலே நடக்கிறவர்கள்போலச் சீராய் நடக்கக்கடவோம்..."* (ரோமர் 13:11-13) என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதினார். இது எப்படிப்பட்ட காலம் என்பதை நாம் அறிந்திருப்பதால், அதற்கேற்ப வாழ நாம் அறிவுறுத்தப்படுகிறோம். காலத்தைப் பற்றிய தெளிவான புரிதலுடன் தங்கள் வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக்கொள்பவர்கள் விவேகமுள்ளவர்கள். இவர்கள் தேவனுடைய சத்தத்தைக் கேட்கத் தங்களைத் தாங்களே ஒழுங்குபடுத்திக் கொண்டதால் (ஏசாயா 50:4,5), எப்படி *"ஏற்ற காலத்தில் ஒரு வார்த்தையைப் பேசுவது"* என்பதை அறிந்தவர்களாய் இருக்கிறார்கள் (நீதிமொழிகள் 15:23). தேவனுக்கு ஊழியம் செய்ய அவர்கள் எப்போதும் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் *"சமயம் வாய்த்தாலும் சமயம் வாய்க்காமல் போனாலும் ஆயத்தமாய்"* இருக்கிறார்கள் (2 தீமோத்தேயு 4:2). தேவனால் எந்த நேரத்திலும் அவர்களை அழைக்க முடியும், ஏனென்றால், அவர்கள் வாழும் காலத்தின் அவசரத்தை அவர்கள் நன்றாய் அறிந்திருக்கிறார்கள். எனவே, அவர்கள் எப்போதும் ஆயத்தத்துடன் கிரமமான வாழ்க்கையை வாழ்கிறார்கள். இவர்கள் மனம் தளராதவர்களும் நற்கிரியை செய்வதில் சோர்ந்து போகாதவர்களுமாய் இருக்கிறார்கள், ஏனெனில் *"ஏற்ற காலத்தில்"* அவர்கள்

பலனை அறுவடை செய்வார்கள் என்பதை நன்றாய் அறிவார்கள் (கலாத்தியர் 6:9). அவர்கள் புகழைத் தேடாமலும், அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யாமலும், பணிவுடன் வாழ்பவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் மனுஷனின் புகழைத் தேடுவதில்லை, ஏனென்றால், தேவன் தங்களை *"ஏற்ற காலத்தில்"* உயர்த்துவார் என்பதை அவர்கள் அறிவார்கள் (1 பேதுரு 5:5,6). நாம் நம் வாழ்க்கையை எப்படி ஒழுங்குபடுத்துகிறோம்? தேவனுடைய கடிகாரத்திற்கு ஏற்றபடி வாழவும், சரியான நேரத்தில் நடக்கவும், அவருடன் இணைந்து செயல்படவும் நாம் முயற்சி செய்கிறோமா? அல்லது மற்றவர்கள் செய்வதைப் பார்ப்பதால், அதே விஷயங்களை நாமும் செய்துகொண்டு சீரற்ற முறையில் வாழ்கிறோமா. நமது முன்னுரிமைகளை மறுவரிசைப்படுத்தி, நமது அட்டவணைகளை மாற்றியமைத்து, தேவன் நம்மை வழிநடத்திச் செல்லும் காலம் மற்றும் வேளைகளுக்கு ஏற்ப வாழ்க்கையை மாற்றியமைத்துக்கொண்டு, நம் வாழ்க்கையை விவேகத்துடன் நாம் ஒழுங்குபடுத்துவோம்.

காலத்தைப் பகுத்தறிவது என்பது, நிலவும் சூழ்நிலைகளைக் கவனித்து வானிலையைக் கூறுவதைப் போன்றதுதான். மத்தேயு 16ல் இயேசு தம்மைப் பின்தொடர்ந்த திரளான ஜனங்களைக் கடுமையாகக் கடிந்துகொள்ள இந்த ஒப்புமையைப் பயன்படுத்தினார். மேகத்தின் நிலை மற்றும் காற்றின் திசையைப் பார்த்து, ஜனங்களால் வானிலையைக் கணிக்க முடிந்தது. இருப்பினும், அவர்களால் காலத்தைக் கண்டறிய முடியவில்லை. இந்தப் பயனுள்ள ஒப்புமையிலிருந்து, தேவன் நம்மை வழிநடத்திக்கொண்டிருக்கும் காலங்களையும் சமயங்களையும் சரியாகப் புரிந்து நடந்துகொள்ள உதவும் சில கருத்துக்களை நாம் அறியலாம். கவனமாய் இருப்பதே நேரத்தையும் பருவங்களையும் பகுத்தறிவதற்கான திறவுகோலாகும்.

## உங்களுக்குள் இருக்கும் தேவ ஆவியானவரின் வழிநடத்துதலைக் கவனியுங்கள்

தேவன் உங்களில் கிரியை செய்யும்போது, அவர் தம்முடைய திட்டங்களையும் நோக்கங்களையும் உங்களுக்கு வெளிப்படுத்துகிறார். அவருடைய ஆவியினாலும் வார்த்தையினாலும் ஸ்திரமான ஆசைகள், கனவுகள் மற்றும் "நம்பிக்கைகளை" உங்களுக்குள் பிறப்பிக்கிறார். காணாமல்போனவர்களைத் தேடவும், அவருடைய வார்த்தையை உபதேசிக்கவும், ஒரு நல்ல தொழில் செய்பவராக மாறவும் மற்றும் இவற்றைப் போன்ற பல காரியங்களுக்காக உங்கள் உள்ளான மனிதனில் தீராத ஆசை எழும்புவதை நீங்கள் உணர்வீர்கள். இது தேவன் உங்களுடன் பேசுவதாகும். தேவனுடைய இத்தகைய கிரியையைக் குறித்து மிகவும் கவனம் செலுத்துகிறவர்களாய் இருங்கள்.

## உங்கள் வாழ்க்கையின் சூழ்நிலைகள் மற்றும் நிகழ்வுகளைக் கவனியுங்கள்

உங்கள் காலங்களும், உங்கள் வாழ்க்கையின் நிகழ்வுகளும் தேவனுடைய கரங்களில் உள்ளன (சங்கீதம் 31:15). காரியங்கள் யதார்த்தமாக நடப்பதில்லை. பல நேரங்களில், தேவன் உங்களுக்காக குறிப்பிட்ட நிகழ்வுகளையும் சூழ்நிலைகளையும் ஏற்பாடு செய்கிறார் என்பதை உணர்ந்து பாருங்கள். உங்கள் வழியில் குறுக்கிடும் இந்த விஷயங்களின் மூலமாக அவர் உங்களுக்கு உணர்த்தும் ஒரு காரியம் உள்ளது. ஒருவேளை இது தேவனுடைய மனுஷன் ஒருவனுடனான அல்லது ஒரு பெரிய நிறுவனத்தின் தலைவருடனான தெய்வீக சந்திப்பாக இருக்கலாம். ஒரு குறிப்பிட்ட வேலையில் ஈடுபடுவதற்கும், பிரசங்கிக்கப்படும் ஒரு குறிப்பிட்ட செய்தியைக் கேட்பதற்கும், அல்லது ஒரு நண்பர் சொல்லும் கருத்தைக் கேட்பதற்கும் இது ஒரு

வாய்ப்பாகக் கூட இருக்கலாம். வாழ்க்கையின் ஒவ்வொரு சாதாரண நிகழ்வுகள் மூலமாகவும் தேவன் உங்களிடம் பேச முடியும். அவர் எப்போது பேசுகிறார் (மற்றும் எப்போது பேசாமல் அமைதியாக இருக்கிறார்) என்பதைப் பற்றி அறிந்துகொள்ள உணர்வுள்ளவர்களாய் இருங்கள், மற்றும் அவர் என்ன பேசுகிறார் என்பதைக் கவனியுங்கள்.

## உங்களில் கிரியை செய்யும் தேவ ஆவியானவரின் அசைவாடுதலை தற்போதைய நிகழ்வுகளுடன் தொடர்புபடுத்தி செயல்படுங்கள்

நீங்கள் வெளியே தெருவில் இருக்கும்போது, வானத்தில் கார்மேகங்கள் கூடுவதைக் கண்டால், மழையின் வாசனையை உணர ஆரம்பித்தால் அல்லது முதல் மழைத் துளிகள் விழுவதை உணர்ந்தால், பொதுவாக பாதுகாப்பின்றி நின்றுகொண்டு மழையில் நனையமாட்டீர்கள். நீங்கள் உங்கள் குடையை வெளியே எடுப்பீர்கள் அல்லது ஒரு கூடாரத்தின் கீழ் வருவீர்கள். அதைப்போலவே, ஆவியானவரின் வழிநடத்துதலையும் உங்கள் வாழ்வில் உள்ள சூழ்நிலைகளையும் நீங்கள் ஒன்றிணைத்து அதை உணரக் கூடிய திறன் உடையவராக இருந்து தொடர்ந்து அதற்கேற்றவாறு செயல்பட வேண்டும்

## வாழ்க்கையின் காலங்களைக் குறித்து உணர்வுள்ளவர்களாக இருங்கள்

உலகில் தட்பவெப்பநிலை சமநிலையில் இல்லாத பகுதிகளில் வாழ்ந்து வருபவர்கள் பருவத்திற்கு ஏற்ற ஆடைகளை அணிவதன் முக்கியத்துவத்தை அறிவார்கள். குளிர்காலத்தில், அவர்கள் தடிமனான உடல் சூட்டைத் தக்கவைக்கும் ஆடைகளை வெளியே எடுப்பார்கள் மற்றும் கோடையில், அவர்கள் இலகுவான ஆடைகளை அணிவார்கள். வேறு வார்த்தைகளில் கூறுவதானால்,

நிலவும் வானிலைக்கு ஏற்ப நமது ஆடை முறைகளை நாம் மாற்றியமைக்கிறோம். இதைப்போலவே, விசுவாசிகளாக, தேவன் நம்மை வழிநடத்திச் செல்லும் வழியில் நாம் வாழ்க்கையை ஒழுங்குபடுத்த வேண்டும் மற்றும் காலத்திற்கு ஏற்ப நடக்க வேண்டும்.

## தேவன் உங்களை ஆயத்தப்படுத்தும் காலங்களின் வழியாக வழிநடத்திச் செல்வார்

தேவன் நம்மை அழைத்த ஊழியத்திற்காக நம்மை ஆயத்தப்படுத்துகிறார் என்பதை நாம் அனைவரும் புரிந்துகொள்கிறோம். பொதுவாக ஆயத்தப்படுவதற்குப் பல பருவங்கள் இருக்கக் கூடும் என்பதை நாம் உணரத் தவறலாம். உதாரணமாக, நீங்கள் புதிய திறன்களையும் திறமைளையும் கற்று வளர்த்துக்கொள்ளும் ஒரு காலகட்டத்தில் நீங்கள் வாழ்ந்துகொண்டிருக்கலாம். இது முடிந்தவுடன், உங்கள் இருதயத்தில் நீங்கள் கொண்டிருக்கும் கனவையும் திட்டத்தையும் நிறைவேற்ற தேவன் உங்களுக்கு உதவுவார் என்று நீங்கள் நினைத்துக்கொண்டிருக்கலாம். இந்தக் காலகட்டம் முடிந்ததும், உங்கள் இருதயத்தில் உள்ள கனவு நிறைவேறத் தொடங்குவதற்குப் பதிலாக, உங்கள் வாழ்க்கையின் வேறு சில அம்சங்களை தேவன் கையாள்வதற்கான மற்றொரு ஆயத்த பருவத்திற்குள் நீங்கள் அடியெடுத்து வைப்பது உங்களுக்கு அதிர்ச்சியளிக்கலாம். ஒருவேளை, இந்தப் பருவத்தில், அவர் உங்கள் இருதயத்தின் பிரச்சனைகளை கையாளத் தொடங்குகிறார்—உங்கள் நற்குணத்தை வளர்த்து வலுப்படுத்துகிறார் மற்றும் உங்களை சீர்படுத்துகிறார்.

## ஒவ்வொரு பருவமும் அடுத்த பருவத்திற்கு உங்களை ஆயத்தப்படுத்துகிறது

தேவன் உங்களை அழைத்துச் செல்லும் வெவ்வேறு

பருவங்கள், நீங்கள் வெறுமனே கடந்து சென்று அவற்றை மறந்துவிடும் ஒரு வாழ்க்கையின் தனிமையான காலங்கள் அல்ல. மாறாக, ஒவ்வொரு பருவமும் வாழ்க்கையின் முந்தைய பருவத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது. வாழ்க்கையின் இந்தப் பருவத்தில் நீங்கள் கற்றுக்கொள்ளும் விஷயங்கள், அடுத்த அல்லது எதிர்கால வாழ்க்கைப் பருவங்களில் வரவிருக்கும் சவால்களுக்கு உங்களை ஆயத்தப்படுத்துகிறது. ஆகவேதான், வாழ்க்கையின் ஒவ்வொரு பருவமும் முக்கியமானது.

## பருவங்கள் மாறும்போது நீங்களும் மாற ஆயத்தமாக இருங்கள்

பருவங்கள் மாறி, வாழ்க்கை ஒருவித திருப்பத்துக்கு உட்படும்போது, மாற்றம் என்பது அவசியமாகிறது. உதாரணமாக, வாழ்க்கையின் தற்போதைய பருவத்தில், நீங்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வசிக்கலாம், குறிப்பிட்ட சில நண்பர்களைக் கொண்டிருக்கலாம் மற்றும் சில செயல்களில் ஈடுபட்டிருக்கலாம். நீங்கள் தற்போது இருக்கும் வாழ்க்கையின் பருவத்தை தேவன் மாற்றும்போது, ஒரு புதிய இடத்திற்குச் செல்லவும், புதிய நண்பர்களை உருவாக்கிக்கொள்ளவும், முற்றிலும் புதிய செயல்களில் ஈடுபடவும் தேவன் உங்களிடம் கோரலாம். இருப்பினும், நீங்கள் பரிச்சயமானவர்களுடன் சௌகரியமாக இருப்பதாலும், தெரியாத நபர் மற்றும் சூழ்நிலைகளுக்கு பயப்படுவதாலும் உங்களில் சிலர் இதைக் கடினமாக உணரலாம். ஆனாலும், உங்கள் நிகழ்காலத்திலிருந்து தேவன் உங்களுக்காக வைத்திருக்கும் எதிர்காலத்திற்குச் செல்ல நீங்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

## தொலைநோக்கு பார்வையுடன் அடுத்த பருவத்திற்கு ஆயத்தமாகுங்கள்

சில நேரங்களில், உங்கள் வாழ்க்கையின் பருவம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மாறும் என்பதை நீங்கள் முன்பே அறிந்திருப்பீர்கள். உதாரணமாக, நீங்கள் இன்னும் சில மாதங்களில் ஒரு தனி நபராக இல்லாமல் திருமணமான நபராக மாறலாம் என்பது உங்களுக்குத் தெரியும். இந்த மாற்றம் வெகு தொலைவில் இல்லை, அண்மையில் நிகழப்போகிறது என்பதை நீங்கள் அறிந்திருப்பதால், உங்களால் முடிந்தவரை திட்டமிட்டு அதற்கு தயாராகுங்கள். மாற்றத்திற்கான காலம் வரும்போது, அதைப் பற்றிய விழிப்புணர்வு இல்லாதவர்களாய் இருந்துவிடாதீர்கள். இந்த மாற்றத்தைப் பாதிக்கும் அனைத்து சிக்கல்களையும் சிந்தித்துப் பார்த்து நன்கு ஆயத்தமாகுங்கள்.

## தற்போது நீங்கள் இருக்கும் பருவத்தை சந்தோஷமாய் அனுபவியுங்கள்

வாழ்க்கையின் ஒவ்வொரு பருவத்தையும் நீங்கள் அனுபவிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். வாழ்க்கையின் சில பருவங்கள் மற்றவைபோல இனிமையாக இருப்பதில்லை. ஆயினும்கூட, ஒவ்வொரு பருவத்திற்கும் ஒரு மதிப்பு இருப்பதால், பயணத்தை சந்தோஷமாக அனுபவிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

## 'கெய்ரோஸ்' எப்போது நிகழும்?

முன்பு குறிப்பிட்டதுபோல், *'கெய்ரோஸ்'* என்பது நம் வாழ்வில் சில நிகழ்வுகள் ஒன்றிணைந்து, ஒரு வாய்ப்புக்கான சரியான நேரமாக அமையும் சமயமேயாகும். தனிப்பட்ட விஷயங்களில், தேவனைச் சார்ந்ததைவிட *'கெய்ரோஸ்'* நம்மைச்சார்ந்ததாகவே இருக்கிறது. உதாரணமாக, உங்களது

தொழில் அல்லது ஊழியத்தைத் தொடங்க *'கெய்ரோஸ்'* தருணத்திற்காக நீங்கள் காத்திருக்கலாம். அவருடைய ஊழியத்தைத் தொடங்கக் காத்திருக்கும் ஒருவரைப் பொறுத்தவரை, அந்த நபர் ஆயத்தப்பட்டிருக்கிறார் என்பதை தேவன் பார்க்கும்போது, அந்த *'கெய்ரோஸ்'* தருணம் வரும். இந்த ஆயத்தமானது ஒரு நபர் தனது வாழ்க்கையில் தேவனுடைய கிரியைகளுக்கு எவ்வாறு பதிலளிக்கிறார் என்பதைச் சார்ந்ததாக இருக்கிறது. தேவன், தாம் விரும்பும் குணநலன்கள், எண்ணத்தில் தூய்மை, சரியான மனப்பான்மை, ஒருவருக்கு ஊழியம் செய்யத்தக்க உள்ளம் ஆகியவை ஒரு நபரிடத்தில் உருவாகும் வரை காத்திருப்பார். இவைகள் அவனிடம் முதிர்ச்சியடைந்திருப்பதை தேவன் கண்டவுடன், தன் ஊழியத்தைத் தொடங்குவதற்கான 'கெய்ரோஸ்' தருணம் அவனுக்கு வருகிறது. அதுவரை தேவன் தேவையான அளவு காத்திருப்பார். தேவன் ஒருபோதும் அவசரப்படுவதில்லை.

# 5
# காலத்தை மீட்டெடுத்தல்

யோவேல் 2:25
**... வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப் பூச்சிகளும், பச்சைப் புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன்.**

சங்கீதம் 103:5
**நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்;**
**கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வால வயதுபோலாகிறது.**

2 பேதுரு 3:8
**பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம்வருஷம்போலவும், ஆயிரம்வருஷம் ஒருநாள்போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம்.**

இறுதியாக, காலத்தை மீட்டெடுத்தல் பற்றி சில கூற்றுகளைப் பார்ப்போம். அப்போஸ்தலர் 3:19-21 இல் கூறப்பட்டுள்ளபடி, இதுவே மீட்பின் காலம் என்று பெரும்பாலான வேத பண்டிதர்கள் நம்பும் காலத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். மாபெரும் வல்லமையும் மகிமையும் வெளிப்படும்படி திருச்சபை மீட்டெடுக்கப்படுவதால், இது நிறைவேற்றப்படுகிறது. இருப்பினும், வேதாகமத்தில் நாம் காண்கிறபடி, எப்போதெல்லாம் தேவன் ஒரு திருப்பத்தை ஏற்படுத்துகிறாரோ, அப்போதெல்லாம் அவர் ஒரு பெருக்கத்தை ஏற்படுத்துகிறார் (யோபு 42:10). தேவன் மீட்டுக்கொள்ளும் ஒரு விஷயமானது, முந்தையதை விட மிகவும் மகத்தானதாகவும் சிறந்ததாகவும் மாறும். தொன்றுதொட்டு வரும் காலத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, இதுவே உண்மையாகும். நேரம்

தேவனைக் கட்டுப்படுத்தாது, மாறாக, தேவனே நேரத்தைக் கட்டுப்படுத்துகிறார். நேரமானது தேவனுடைய கடிகாரத்தில், நாம் பழக்கப்பட்டதிற்கு மாறாக இயங்குகிறது. நம்மில் சிலரது வாழ்க்கையை வெட்டுக்கிளிகள் பாதித்திருக்கலாம். இந்தச் சூழலில், வெட்டுக்கிளிகளானது சேதம், அழிவு மற்றும் கனி கொடுக்காத தன்மை ஆகியவற்றிற்கு அடையாளமாக உள்ளது. வீணாகிவிட்ட ஆண்டுகளை (காலத்தை) தேவனால் மீட்டெடுக்க முடியும் (காரணம் எதுவாக இருந்தாலும் பரவாயில்லை). ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நமது சொந்த முயற்சியால் நம்மால் ஒருபோதும் சாதிக்க முடியாததை, ஒரே வருடத்தில் அவருடைய ஆவியின் மூலம் செய்து நிறைவேற்றும்படி அவரால் நமக்கு உதவ முடியும். நம் வாழ்வில் நம்மால் வீணடிக்கப்பட்ட நேரத்தை மீட்டெடுக்க நாம் தேவனை நோக்கிப் பார்க்கலாம்.

# உன்னை நேசிக்கும் தேவன் யார் என்று உனக்குத் தெரியுமா?

சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பு, தேவன் மனுஷனாக இந்த உலகத்திற்கு வந்தார். அவருடைய நாமம் இயேசு என்பதாகும். அவர் முற்றிலும் பாவமில்லாத வாழ்க்கையை வாழ்ந்தார். இயேசு மாம்சத்தில் வந்த தேவனாக இருந்ததால், அவர் சொன்னவைகள் மற்றும் செய்தவைகள் அனைத்துமே தேவனை நமக்கு வெளிப்படுத்தின. அவர் பேசின வார்த்தைகள் யாவும் தேவனுடைய வார்த்தைகளாக இருந்தன. அவர் செய்த காரியங்கள் யாவும் தேவனுடைய செயல்களாக இருந்தன. இயேசு இந்தப் பூமியில் அநேக அற்புதங்களைச் செய்தார். அவர் வியாதியஸ்தர்களையும் வேதனையில் இருந்தவர்களையும் குணப்படுத்தினார். அவர் குருடர்களின் கண்களைத் திறந்தார், செவிடனின் செவிகளைத் திறந்தார், முடவர்களை நடக்கச் செய்தார், மற்றும் சகலவிதமான நோய்களையும் வியாதிகளையும் சுகமாக்கினார். அவர் ஒரு சில அப்பத் துண்டுகளை அற்புதமாகப் பெருகச் செய்ததன் மூலமாக பசியோடிருந்தவர்களை போஷித்தார், கடும்புயலை அடக்கினார், மற்றும் இன்னும் அநேக அற்புதங்களையும் கூட செய்தார்.

**ஜனங்கள் நலமாகவும், சுகமாகவும், ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புவதால், அவர் ஒரு நல்ல தேவன் என்பதை இந்தச் செயல்கள் அனைத்தும் நமக்கு வெளிப்படுத்துகின்றன. தேவன் ஜனங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்புகிறார்.**

அப்படியானால் தேவன் ஏன் மனுஷனாக மாறி நமது உலகத்திற்குள் வரும்படி தீர்மானிக்க வேண்டும்? இயேசு ஏன் வந்தார்?

நாம் எல்லோருமே பாவம் செய்து, நம்மை சிருஷ்டித்த தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொள்ளத் தகாத செயல்களைச் செய்துவிட்டோம். பாவத்திற்கான விளைவுகள் நிச்சயம் உண்டு. பாவமானது தேவனுக்கும் நமக்கும் இடையே தாண்டிச் செல்ல முடியாத ஒரு மிகப் பெரிய சுவரைப் போன்றதாக இருக்கிறது. பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது. நம்மை சிருஷ்டித்தவரை அறிந்துகொள்வதிலிருந்தும், ஒரு அர்த்தமுள்ள உறவை அவருடன் ஏற்படுத்திக்கொள்வதிலிருந்தும் அது நம்மைத் தடுக்கிறது. எனவே, நம்மில் பலர் இந்தக் காலியிடத்தை மற்ற விஷயங்களால் நிரப்ப முயற்சிக்கிறோம்.

நம்முடைய பாவங்களின் மற்றொரு விளைவு, தேவனிடமிருந்து விலகிச் செல்லும் நித்திய பிரிவினையாகும். தேவனுடைய நியாயஸ்தலத்தில், பாவத்திற்கான தண்டனை மரணமாகும். மரணம் என்பது தேவனிடமிருந்து பிரிந்து நரகத்தில் வாழும் நித்திய பிரிவினையாகும்.

ஆனால் நற்செய்தி என்னவென்றால், நம்மால் பாவத்திலிருந்து விடுபட்டு தேவனிடத்திற்குத் திரும்பிவர முடியும் என்பதேயாகும். வேதாகமம் கூறுகிறது, ***"பாவத்தின் சம்பளம்(கூலி) மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்"*** (ரோமர் 6:23). இயேசு சிலுவையில் மரித்தபோது, முழு உலகத்தின் பாவங்களுக்கான விலைக்கிரயத்தையும் செலுத்தினார். மூன்று நாட்களுக்குப் பிறகு, அவர் மறுபடியும் உயிரோடு எழும்பி, பலருக்குத் தம்மை உயிரோடு இருக்கிறவராகக் காட்டினார், பின்பு, மறுபடியும் பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றார்.

தேவன் அன்பும் இரக்கமும் கொண்ட தேவனாக இருக்கிறார். ஒரு நபர் கூட நரகத்தில் அழிந்துபோவதை அவர் விரும்புவதில்லை. ஆகவேதான், பாவத்திலிருந்தும் அதன் நிரந்தர விளைவுகளிலிருந்தும் விடுபடுவதற்கான ஒரு வழியை முழு மனித இனத்திற்கும் அருளுவதற்காக அவர் இறங்கி வந்தார். அவர் பாவிகளை இரட்சிக்க வந்தார் - உங்களைப் போன்றவர்களையும் என்னைப் போன்றவர்களையும் பாவத்திலிருந்தும் நித்திய மரணத்திலிருந்தும் மீட்கவே வந்தார்.

இலவசமாகக் கிடைக்கும் இந்த பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள, நாம் ஒரே ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று வேதாகமம் நமக்குச் சொல்கிறது - அது என்னவென்றால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்து முடித்ததை ஏற்றுக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடு விசுவாசிக்க வேண்டும் என்பதேயாகும்.

*"... அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான்"* (அப்போஸ்தலர் 10:43).

*"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்"* (ரோமர் 10:9).

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால், நீங்களும் கூட பாவமன்னிப்பைப் பெற்று சுத்திகரிக்கப்படலாம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், அவர் உங்களுக்காக சிலுவையில் என்ன செய்திருக்கிறார் என்பதையும் விசுவாசிப்பதற்கு உங்களுக்கு உதவும் ஒரு எளிய ஜெபம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு உங்களுக்காகச் செய்ததை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள் என்பதை வெளிப்படுத்தவும், உங்கள் பாவங்களுக்கான பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டு சுத்திகரிக்கப்படவும் இந்த ஜெபம் உங்களுக்கு உதவும். இந்த ஜெபம் உங்களுக்கான ஒரு வழிகாட்டி மட்டுமே. நீங்கள் உங்கள் சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியும் கூட ஜெபிக்கலாம்.

*அன்புள்ள கர்த்தராகிய இயேசுவே, சிலுவையில் நீர் எனக்காக என்ன செய்திருக்கிறீர் என்பதை இன்று நான் புரிந்துகொண்டேன். நீர் எனக்காக மரித்தீர், உம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை சிந்தினீர், நான் மன்னிக்கப்படும்படி என் பாவங்களுக்கான தண்டனையை நீர் ஏற்றுக்கொண்டீர். உம்மை விசுவாசிக்கிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்று வேதாகமம் சொல்கிறது.*

*இன்று, நான் உம்மை விசுவாசிக்கவும், எனக்காக சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததன் மூலம் நீர் எனக்காகச் செய்ததை ஏற்றுக்கொள்ளவும் நான் தீர்மானிக்கிறேன். எனது சொந்த நற்கிரியைகளால் நான் என்னை இரட்சித்துக்கொள்ள முடியாது என்பதை அறிவேன், வேறு எந்த மனுஷனும் என்னை இரட்சிக்க முடியாது என்பதும் எனக்குத் தெரியும். என் பாவங்களுக்கான மன்னிப்பை என்னால் சம்பாதிக்க முடியாது.*

*இன்று, நீர் எனக்காக மரித்தீர், என் பாவங்களுக்கான விலைக்கிரயத்தை செலுத்தினீர், மரித்தோரிலிருந்து மறுபடியும் உயிர்த்தெழுந்தீர் என்றும், உம் மீது வைத்திருக்கிற விசுவாசத்தால், என் பாவங்களுக்கான மன்னிப்பையும் சுத்திகரிப்பையும் நான் பெற்றுக்கொள்கிறேன் என்றும் நான் என் உள்ளத்தில் விசுவாசித்து என் வாயினால் அறிக்கையிடுகிறேன்.*

*இயேசுவே உமக்கு நன்றி. உம்மை நேசிக்கவும், உம்மை அதிகமாக அறிந்துகொள்ளவும், உமக்கு உண்மையாக இருக்கவும் எனக்கு உதவி செய்வீராக.*

*ஆமென்.*

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச் பற்றி அறிவோம்

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது பெங்களூர் நகரத்துக்கு உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்க வேண்டும் என்பதும், இந்த தேசத்துக்கும் இன்னும் நிறைய தேசங்களுக்கும் தேவ சத்தமாக இருக்க வேண்டும் என்பதும்தான் எங்களது தரிசனம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது **இயேசுவை நேசிக்கும், வார்த்தையில் கவனம் செலுத்தும், ஆவியால் நிரப்பப்பட்டிருக்கும் ஒரு திருச்சபையும்,** ஒரு குடும்ப திருச்சபையும், மேம்படுத்தும் மையமும், ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டதும் மற்றும் உலகளாவிய ஊழியத்தை செய்யும் ஒரு திருச்சபையுமாகும்.

- **ஒரு குடும்பத் திருச்சபையாக,** கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஐக்கியத்தில் ஒரு சமூகமாக ஒன்றாக வளர்கிறோம், தேவனுடைய சபையாக ஒருவருக்கொருவர் அன்பாக இருந்து அக்கறையோடு ஊழியம் செய்கிறோம்.
- **மேம்படுத்தும் ஒரு மையமாக,** ஒவ்வொரு விசுவாசியும் வெற்றியுடன் வாழவும், கிறிஸ்துவின் சாயலில் முதிர்ச்சியடையவும், அவர்களின் வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றவும் நாங்கள் ஊக்கமளித்து, அவர்களை மேம்படுத்துகிறோம்.
- **ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டவர்களாக,** தேவனுடைய வார்த்தையினாலும் பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையுள்ள செயல்களினாலும், இயேசு கிறிஸ்துவின் முழு சுவிசேஷத்தினால் நமது நகரம், தேசம் மற்றும் பிற தேசங்களை ஆசீர்வதிக்க அர்த்தமுள்ள ஊழியத்தில் ஈடுபடுகிறோம்.
- **ஒரு உலகளாவிய ஊழியமாக,** தேவனுடைய ராஜ்யத்திற்காகத் தங்கள் பிராந்தியங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தெய்வீகத் தலைவர்கள் மற்றும் ஆவியானவரால் வழிநடத்தப்படும் திருச்சபைகளை வளர்ப்பதன் மூலம் உள்நாட்டிலும் உலக அளவிலும் நாங்கள் ஊழியம் செய்கிறோம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மற்றும் நடத்துதலில் தேவனுடைய வார்த்தையை முழுமையாகவும், சமரசம் செய்யாமலும் முன்வைக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். நல்ல இசை, ஆக்கப்பூர்வமான விளக்கக்காட்சிகள், தேர்ந்த வேத தர்க்கவியலாலர்கள், இன்றைய காலத்து ஏற்ற ஊழிய முறைகள், நவீன தொழில்நுட்பம் போன்றவைகள், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கும் முறைக்கும் பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்கள், அதிசயங்கள், அற்புதங்கள் மற்றும் வரங்களுக்கும் ஒருபோதும் ஈடாகாது என்று நாங்கள்

நம்புகிறோம் (1 கொரிந்தியர் 2:4,5; எபிரேயர் 2:3,4). எங்கள் கருப்பொருள் இயேசு, எங்கள் உள்ளடக்கம் வார்த்தை, எங்கள் முறை பரிசுத்த ஆவியானவரின் வல்லமை, எங்கள் தாகம் மக்கள் மற்றும் எங்கள் குறிக்கோள் கிறிஸ்துவைப் போல முதிர்ச்சியடைதலாகும்.

பெங்களூரை மையமாகக் கொண்டு செயல்படும் எங்களது ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது, இந்தியாவில் பல இடங்களில் திருச்சபையைக் கொண்டுள்ளது. ஆல் பீப்பிள்ஸ் சர்ச் இருப்பிடங்களின் தற்போதைய பட்டியலையும் தொடர்புக்கான தகவலையும் பெற, **apcwo.org/locations** ல் உள்ள எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும் அல்லது **contact@apcwo.org** க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

# இலவச வெளியீடுகள்

A Church in Revival
A Real Place Called Heaven
A Time for Every Purpose
Ancient Landmarks
Baptism in the Holy Spirit
Being Spiritually Minded and Earthly Wise
Biblical Attitude Towards Work
Breaking Personal and Generational Bondages
Change
Code of Honor
Divine Favor
Divine Order in the Citywide Church
Don’t Compromise Your Calling
Don’t Lose Hope
Equipping the Saints
Foundations (Track 1)
Fulfilling God’s Purpose for Your Life
Gifts of the Holy Spirit
Giving Birth to the Purposes of God
God Is a Good God
God’s Word—The Miracle Seed
How to Help Your Pastor
Integrity
Kingdom Builders
Laying the Axe to the Root
Living Life Without Strife
Marriage and Family
Ministering Healing and Deliverance
Offenses—Don’t Take Them
Open Heavens
Our Redemption
Receiving God’s Guidance
Revivals, Visitations and Moves of God
Shhh! No Gossip!
Speak Your Faith
The Conquest of the Mind
The Father’s Love
The House of God
The Kingdom of God
The Mighty Name of Jesus
The Night Seasons of Life
The Power of Commitment
The Presence of God
The Redemptive Heart of God
The Refiner’s Fire
The Spirit of Wisdom, Revelation and Power
The Wonderful Benefits of Praying in Tongues
Timeless Principles for the Workplace
Understanding the Prophetic
Water Baptism
We Are Different
Who We Are in Christ
Women in the Workplace
Work—Its Original Design

புதியபுத்தகங்கள்தொடர்ந்துவெளியிடப்படுகின்றன.PDF,ஆடியோ மற்றும் பிற வடிவங்களில் இலவசமாக ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் கிறிஸ்தவ புத்தகங்களைப் பதிவிறக்கம் செய்ய **apcwo.org/books** என்ற வலைதளத்தைப் பார்வையிடவும். இவற்றில் பல புத்தகங்கள் பிற மொழிகளிலும் கிடைக்கின்றன. இலவச ஆடியோ மற்றும் வீடியோ பிரசங்கங்கள், பிரசங்க குறிப்புகள் மற்றும் பல இலவச ஆதாரங்களுக்கு **apcwo.org/sermons** என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.

# கிறிசாலிஸ் ஆலோசனை மையம்

வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளவும், அவற்றைக் கடக்கவும் மக்களுக்கு உதவ, கிறிசாலிஸ் ஆலோசனை மையமானது தனிப்பட்ட ஆலோசனைகளை வழங்குகிறது. கிறிசாலிஸ் கவுன்சிலிங் என்பது தொழில்ரீதியாக பயிற்சி பெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த கிறிஸ்தவ ஆலோசகர்களின் குழுவாகும்.

எங்கள் சேவைகள் எல்லா வயதினருக்குமானவை மற்றும் இது வாழ்க்கையின் பல்வேறு சவால்களைத் தீர்த்துவைக்கின்றன.

**இளம் பிராய நடத்தை**

**பிறரோடு இணைக்கக் குறைபாடு**

**உறவுமுறை சவால்கள்**

**கல்வியில் பின்தங்கிய நிலை**

**தொழில் தொடர்பான பிரச்சினைகள்**

**குடும்பம் / தம்பதிகள்: திருமணத்திற்கு முன், திருமணத்திற்குப் பின்**

**பெற்றோர் / குழந்தைகள் / உடன்பிறந்தவர்கள் / சக வயதினர்**

**நடத்தையில் சீர்கேடு**

**ஆளுமை குறைபாடு**

**உளவியல் / உணர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்**

**மன அழுத்தம் / திடீர் அதிர்ச்சி**

**மது / போதைப்பொருளுக்கு அடிமை**

**ஆவிக்குரிய போராட்டங்கள்**

**வாழ்வியல் முன்னேற்ற ஆலோசனை**

கிரிசாலிஸ் ஆலோசனை சேவைகளுக்கான கட்டணங்கள் குறைவானதாகவும் சுலபமாக செலுத்தக்கூடியதாகவும் இருக்கிறது.

எங்களிடம் உள்ள கைதேர்ந்த ஆலோசகர்களில் ஒருவருடன் சந்திப்பைத் திட்டமிட கீழ்க்கண்ட வழிமுறைகளில் அணுகவும்:

**வலைதளம்: chrysalislife.org**
**தொலைபேசி:** +91-80-25452617 அல்லது கட்டணமில்லா அழைப்பு (இந்தியாவிற்குள்) 1-800-300-00998
**மின்னஞ்சல்: counselor@chrysalislife.org**

கிறிசாலிஸ் ஆலோசனை என்பது ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்டு அவுட்ரீச் செய்யும் ஊழியமாகும்.

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில் பங்குதாரராக இருத்தல்

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் ஊழியர்கள், ஒரு உள்ளூர் திருச்சபையாக தன் சொந்த எல்லைகளுக்கு அப்பால், இந்தியா முழுவதும், குறிப்பாக வட இந்தியா முழுவதும் ஊழியம் செய்வது மட்டுமல்லாமல், (அ) தலைவர்களைப் பெலப்படுத்துதல், (ஆ) இளைஞர்களை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்துதல் மற்றும் (இ) கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்துகின்றனர். இளைஞர்களுக்கான பல பயிற்சிக்கூடங்கள் மற்றும் 'கிறிஸ்தவ தலைவர்களுக்கான கருத்தரங்குகள்' ஆண்டு முழுவதும் நடத்தப்படுகின்றன. மேலும், வார்த்தையிலும் ஆவியிலும் விசுவாசிகளை ஆயத்தப்படுத்தும் நோக்கத்துடன் ஆங்கிலத்திலும் பிற இந்திய மொழிகளிலும் புத்தக வெளியீடுகளின் பல ஆயிரக்கணக்கான பிரதிகள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

ஒரு முறை தரும் நிதியாகவோ அல்லது மாதாந்திர நிதியாகவோ அனுப்புவதன் மூலம் எங்களுடன் நிதி ரீதியாக பங்குதாரராக இருக்க உங்களை அழைக்கிறோம். நமது நாடு முழுவதும் செய்யப்படும் இந்த ஊழியத்திற்காக எங்களுக்கு உதவ நீங்கள் அனுப்பும் எந்தத் தொகையும் பெரிதும் பாராட்டப்படும்.

நீங்கள் அனுப்ப வேண்டிய பரிசுத் தொகையை "ஆல் பீப்பிள்ஸ் சர்ச்"க்கு காசோலை / வங்கி வரையோலை மூலம் எங்கள் அலுவலக முகவரிக்கு அனுப்பலாம். இல்லையெனில், எங்களின் வங்கிக் கணக்கு விவரங்களைப் பயன்படுத்தி வங்கிப் பரிவர்த்தனை மூலம் உங்கள் பங்களிப்பை நேரடியாக அனுப்பலாம்.

**வங்கிக் கணக்கின் பெயர்**: All Peoples Church
**வங்கிக் கணக்கு எண்**: 50200068829058
IFSC குறியீடு: HDFC0004367
**வங்கியின் பெயர்**: HDFC வங்கி, 7M/308 80 Ft Rd, HRBR லேஅவுட், கல்யாண் நகர், பெங்களூரு, கர்நாடகா 560043

***கவனத்தில் கொள்ளவும்:*** *ஆல் பீப்பிள்ஸ் சர்ச் இந்தியா சார்ந்த வங்கிக் கணக்கிலிருந்து மட்டுமே வங்கி பங்களிப்புகளை ஏற்கிறது. உங்கள் பங்களிப்பைச் செய்யும்போது, விரும்பினால், உங்கள் பங்களிப்பைப் பயன்படுத்த விரும்பும் குறிப்பிட்ட ஆல் பீப்பிள்ஸ் சர்ச் ஊழியப் பகுதியைக் குறிப்பிடலாம். கூடுதல் விவரங்களுக்கு,* apcwo.org/give *என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.*

மேலும், உங்களால் முடிந்த போதெல்லாம் எங்களுக்காகவும் எங்கள் ஊழியத்திற்காகவும் ஜெபிக்க மறவாதீர்கள்.

**நன்றி, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!**


## DOWNLOAD THE FREE APP!

*Search for*

"All Peoples Church Bangalore"
in the App or Google play stores.

Available on the App Store

ANDROID APP ON Google play




*A daily 5-minute video devotional.*
*A daily Bible reading and prayer guide.*
*5-minute Sermon summary.*
*Toolkit with Scriptures on various topics to build faith and information to share the Gospel.*
*Resources with sermons, sermon notes, TV programs, books, music and more.*

*IF YOU LOVE IT, TELL OTHERS ABOUT IT!*

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக்

**apcbiblecollege.org**

இந்தியாவின் பெங்களூரில் உள்ள ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரி மற்றும் ஊழியப் பயிற்சி மையமானது, உபதேச ரீதியாக சிறந்த மற்றும் அறிவார்ந்த ஊக்கமளிக்கும் தேவனுடைய வார்த்தையின் படிப்போடு கூட, ஆவியானவரால் நிரப்பப்பட்டு, அபிஷேகம் செய்யப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையில் ஊழியம் செய்வதற்கு ஆயத்தப்படுத்தவல்ல பயிற்சியை வழங்குகிறது. தேவனுடைய வார்த்தையில் ஆழமாக வேரூன்றியிருக்கும் தேவனுக்கேற்ற குணநலன்களோடு, அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்புதங்களால் வல்லமையான செயல்களை ஊழியத்தில் நடத்திக்காட்டும் ஒரு பூரண மனுஷனை எங்களால் உருவாக்க இயலும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரியில் (APC-BC), ஆரோக்கியமான போதனையோடு, தேவனுடைய அன்பை வெளிக்காட்டுவதையும், அபிஷேகம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தையும் மற்றும் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியையையும் வலியுறுத்துகிறோம். பல இளைஞர்களும் வாலிப வயதின் பெண்களும் தங்கள் வாழ்க்கையின் மீதான தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுவதற்காக பயிற்சியளிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

நாங்கள் மூன்று பாட திட்டங்களை வழங்குகிறோம்.

- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - ஒரு வருட படிப்பு சான்றிதழ் (C.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - இரண்டு வருட டிப்ளமோ படிப்பு (Dip.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - மூன்று வருட இளங்கலை படிப்பு (B.Th.)

ஒவ்வொரு வார நாட்களிலும், திங்கள் முதல் வெள்ளி வரை, இந்திய நேரப்படி காலை 9:00 முதல் நண்பகல் 12 மணி வரை (UTC+5:30) வகுப்புகள் நடைபெறும். நாங்கள் மூன்று வழியில் கற்பதற்கான விருப்பத் தேர்வுகளை வழங்குகிறோம்.

- **வளாகத்தில் கற்றல்:** வளாகத்தில் நேரடியாக வகுப்புகளில் கலந்து கொள்ளுதல்
- **இணைய வழியில் கற்றல்:** ஆன்லைனில் நேரடி விரிவுரைகளில் கலந்து கொள்ளுதல்
- **மின்னஞ்சல் வழியாக கற்றல்:** apcbiblecollege.org/elearn ஆன்லைன் செயலி மூலம் தானாகக் கற்றுக்கொள்ளுதல்

**இணைய வழியில் விண்ணப்பிக்கவும்,** மற்றும் கல்லூரி, பாடத்திட்டம், படிப்புக்கான தகுதி, கல்விச் செலவுகள் பற்றிய கூடுதல் தகவலுக்கும் மற்றும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்யவும், தயவுசெய்து apcbiblecollege.org என்ற இணையதளத்திற்குச் செல்லவும்.

உலகம் உண்டானது முதற்கொண்டு அல்லது ஒருவேளை நித்திய நித்தியமாக கடந்த காலமாகிய — அறியப்படாத காலத்திலிருந்து நிகழ்காலமாகிய இன்று வரை—தேவனிடத்தில் ஒரு கடிகாரம் உள்ளது என்ற உண்மையை சிந்தித்துப் பார்ப்பதற்கு நீங்கள் எப்போதாவது சற்று நேரம் ஒதுக்கியிருக்கிறீர்களா? நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கைக்கும் தேவன் ஒரு கடிகாரத்தை வைத்திருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா? உங்கள் மணிக்கட்டில் இருக்கும் கடிகாரம் அல்லது சுவரில் உள்ள கடிகாரத்தின்படி மட்டும் அல்லாமல், தேவனுடைய கடிகாரத்தின்படி உங்கள் வாழ்க்கையை ஒழுங்குபடுத்தி அமைத்துக்கொள்ள நீங்கள் எப்போதாவது முயற்சித்திருக்கிறீர்களா அல்லது விரும்பியிருக்கிறீர்களா? தேவனுடைய நேரத்திற்கு ஏற்ப நீங்கள் காரியங்களைச் செய்வதும், உங்கள் வாழ்க்கையின் எந்த நேரத்திலும், தேவன் விரும்புவதை மட்டுமே நீங்கள் செய்து, உங்கள் வாழ்க்கைக்கு நியமிக்கப்பட்ட நேரத்தில் நீங்கள் எப்படி இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறாரோ, அப்படியே நீங்கள் மாற வேண்டியதும் உங்களுக்கு எவ்வளவு முக்கியமானது?

இவை சவாலான கேள்விகள், தேவனுடைய கடிகாரத்தின் நேரத்தை அறிந்துகொள்ளவும் அதற்கேற்றபடி நம் வாழ்க்கையை ஒழுங்கமைத்துக்கொள்ளவும் கற்றுக்கொள்வது உண்மையிலேயே முக்கியமானது. தனி நபர்களாக, தேவன் நமக்காக வகுத்திருக்கிற காலத்தைப் பகுத்தறியவும் புரிந்துகொள்ளவும் இந்தப் புத்தகம் நமக்கு உதவும்.

All Peoples Church & World Outreach
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: contact@apcwo.org
Website: apcwo.org